# சோதிடமலர்

# SOTHIDA MALAR




உள்ளே..........

* தமிழ் எழுத்துக்களும் எண்களும்
* உத்தியோகத்திலிருந்து நீக்கப் படுவேனா?
* அதிஷ்ட எண் ஞானம்
* ஆய்வு மன்றம்
* வானியற் காட்சிகள்
* குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *

குரோதன ௵ மாசி ௴

**(13-2-86—14-3-86)**

விலை ரூபா: 3-00



பலாபலன்களைச் சரிவரத் தருவ...

உ

# சோதிட மலர்

SOTHIDA MALAR


ஆசிரியர்:

பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா

(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ஸ்ரீ மாசி மீ

( 13 - 2 - 86 )

| | |
|---|---|
| மலர் 8 | இதழ் 11 |


ப்ரசண்ட பாடவாநல ப்ரபாசுபப்ர சாரணீ
மஹாஷ்ட சித்தி காமினி, ஜநாவஹூத ஜல்ப்பனு
விமுக்த வாமலோசனு, விவாவஹ காலகத்வனி
சிவேதி மந்த்ரபூஷணு, ஜகஜ்ஜயாய ஜாயதாம்.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கி
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

சூரியகிரகணம் எங்கும் வியாபித்து எல்லாப் பொருட்களையும் எவ்விடத்திலும் பிரகாசிக்கச் செய்கிறது. இறைவனே எப்பொருளுமாய் அதனதன் வாயிலாகத் தன் பெருமையையும், சிறப்பையும், அழகையும், வல்லமையையும் விளக்குகின்றான். யாதாயினும் ஓர் பொருள் அல்லது ஓர் உயிர் ஏதாவது ஓர் விதத்தில் மனதைக்கவர வல்லதாயின் அத்தகைய தன்மை, அல்லது ஓர் மாண்பு சக்ஷாத் இறைவனுடையதே. இதுவே இறைவனின் மகிமையாகும்.

"எங்குஞ் சிவமா யிருத்தலால் எங்கெங்குந் தங்[illegible]னருள் தன்வினை யாட்டதே."

இம்மாத விசேடம்

## மாசி மகம்

மாசி மாத மக நட்சத்திரத்துடன் கூடிய புண்ணிய காலத்தில், அலகில் சோதியன் அம்பலத்தாடுபவனும் ஆனந்தக்கூத்தனை, அருளே உருவமெனில் அவ்வருட்கடலையேத்தி வழிபாடு செய்வதற்கு அம்பிகையின் அருட்பிராத்தனைப்படி மக்களெல்லோரும் வாழ்த்தி வணங்கலாம்.

இறைவன் கைலையங்கிரியில் தேவிசமேதராக வீற்றிருந்த போது தேவி இறையருளின் உண்மை நிலையென்ன என்று பிரார்த்தித்தபோது, இறைவன் "உயிர்கள் உய்வடைவதற் பொருட்டு ஐந்தொழிலை நடத்துவோம், எங்கும் நீக்கமற நிறைந்திருப்போம். உருவமற்ற நிலையில் அருளே உருவமாகத் தோன்றும்" என உரைத்தபோது இறைவியும் அருளுக்கு உருவமாவது யான் தானே எனத் தன்னை வியந்தாள். அப்போது தேவியின் சிந்தையை மாற்ற எண்ணி உயிரினங்கள் யாவும் இயங்காத நிலையைத் தோற்றுவித்தார். அத்தருணம் இவ்வுண்மையை உணர்ந்த தேவி ஆச்சரியமடைந்து எனக்காக இந்நிலையைக் காட்டியருளினீர். மீண்டும் உயிர்கள் நலமடைய அருள்செய வேண்டுமென வேண்டியபோது உனது சிறு தவறினால் நீ பூமியில் தக்கன் மகளாக அவதரித்து தவமியற்றும்போது யாம் உன்னைவந்து மணம் செய்து உயிரினங்களைக் காத்தருள்வோம் என்று அருளினர். இவ்வாறு இறைவியும் பூமியிலே காரிந்தி நதியில் ஒரு தாமரைப்பூவினில் வலம்புரிச்சங்கு வடிவாய் தோன்றினர். மாசிமகத்தினமாகிய அன்று தக்கனும் நீராடவந்தபோது அப்பூவினில் அச்சங்கையெடுத்ததும் அழகிய பெண் குழந்தை வடிவானது. இத்தினமே மாசிமகம்.

மனிதன் ஒருவன் உலகத்தவர்க்கென்றே உயிர் வாழ்ந்திருக்கும்போது உலகம் முழுதும் அவன் நன்மையில் கருத்துடையதாகின்றது. தெய்வத்தின் பூஜையை மனிதன் யாண்டும் முழுமனதோடு ஆராதிக்கும்போது அத்தெய்வத்தின் விபூதிகளெல் (ஐஸ்வர்யம்) லாம் அம்மனிதனை வந்தடைகின்றது. பிறர்க்கு மனிதன் எதை எடுத்து அன்புடன் வழங்குகிறானோ அதையே இறைவன் இயற்கை மூலமாக பல்வேறுவகையாக பல மடங்கு செல்வங்களாக எடுத்து வழங்குகிறான் இக் கூற்றை தேவர்களைப் பேணுங்கள், தேவர்கள் உங்களைப் பேணட்டும். பரஸ்பரம் தேவரும் மனிதனும் பேணப்படுவதால் பெருநன்மையை பெறுகிறோம் எனும் கீதோபதேசம் வலியுறுத்துகிறது.

# நாள் எப்படி?

மாசி 1 வியா (13-2-86) பஞ்சமி முழுவதும், ரேவதி பி. இ. 4.33 வரை, சித்தாமிர்தம், முக்கிய சருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 2.04—3-34

மாசி 2 வெள் (14-2-86) பஞ்சமி காலை 7-21 வரை அசுவினி முழுவதும், அமிர்தம், ஷஷ்டிவிரதம். அவசிய கருமங்களைச் செய்யவும்.
ராகு 11-04—12-34

மாசி 3 சனி (15-2-86) ஷஷ்டி காலை 9-32வரை, அசுவினி காலை 7—09 வரை. சித்தம், சுபகருமங்கட்கு நன்று. ராகு 9-34—11.04

மாசி 4 ஞாயி (16-2-86) ஸப்தமி பகல் 12-05வ. பரணி-மரணம் பகல் 10-07 வரை, கார்த்திகை விரதம். அசுபதினம். ராகு 5.03—6-33

மாசி 5 திங் (17-2-86) அஷ்டமி பகல் 2-46 வரை கார்த்திகை—மரணம் பகல் 1-14 வரை, சுபதினமன்று. ராகு 8-03—9.33

மாசி 6 செவ் (18-2.86) நவமி மாலை 5-16 வரை, ரோகிணி மாலை 4-12 வரை, அமிர்தசித்தம், அசுபதினம். ராகு 3-32—5-02

மாசி 7 புதன் (19-2-86) தசமி மாலை 7-24 வரை. மிருகசீரிடம் மாலை 6-48 வரை, சித்தம் சுபகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 12-32—2-02

மாசி 8 வியா (20-2-86) ஏகாதசி இரவு 8-56 வ. திருவாதிரை-மரணம் இரவு 8.51 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம். அசுபதினம். ராகு 2-02—3-32

மாசி 9 வெள் (21-2-86) துவாதசி இரவு 9-48 வ. புனர்பூசம்-சித்தம் இரவு 10-16 வரை, முக்கியமான கருமங்கள் செய்யலாம்.
ராகு 11-02—12-32

மாசி 10 சனி (22-2-86) திரயோதசி இரவு10-00வ. பூசம்-சித்தம் இரவு 11-02 வரை. பிரதோஷவிரதம். சுபதினமன்று. ராகு 9-31—11-01

மாசி 11 ஞாயி (23-2-86) சதுர்த்தி-மரணம் இரவு 9-32 வரை, ஆயிலியம்-சித்தம் இரவு 11-11 வ. அசுபதினம். ராகு 5-01—6-31

மாசி 12 திங் (24-2-86) பூரணை இரவு 8-33 வ. மகம்-மரணம் இரவு 10.48 வரை. பூரணைவிரதம் மாசிமகம் அசுபதினம். ராகு 8.01—9-31

மாசி 13 செவ் (25-2-86) பிரதமை மாலை 7-07வ. பூரம் இரவு 10-00 வரை, சித்தாமிர்தம். சுபதினமல்ல. ராகு 3-30—5-00

மாசி 14 புத (26-2 86) துவிதியை மாலை 5-20வ. உத்தரம் இரவு 8-53 வரை, அமிர்தசித்தம், முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 12-30—2-00

மாசி 15 வியா (27-2-86) திரிதியை பகல் 3-22வ. அத்தம் மாலை 7-34 வரை, சித்தம், கரிநாள், அவசியமானவற்றை மேற்கொள்ளலாம்.
ராகு 2.00—3-30

மாசி 16 வெள் (28-2-86) சதுர்த்தி பகல் 1-15வ. சித்திரை மாலை 6-10 வரை, சித்தம், கரிநாள். சுபதினமன்று. ராகு 10-59—12-29

மாசி 17 சனி (1-3-86) பஞ்சமி பகல் 11-05 வ. சுவாதி மாலை 4-42 வரை, அமிர்தசித்தம், கரிநாள். அசுபதினம். ராகு 9-28—10-58

மாசி 18 ஞாயி (2-3-86) ஷஷ்டி காலை 8-56 வ, விசாகம் பகல் 3-16 வரை, மரணம், அசுபதினம். ராகு 4.58—6.28

மாசி 19 திங் (3-3 86) ஸப்தமி - மரணம் காலை 6-50 வரை; அஷ்டமி பி. இ. 4-47 வரை, அனுஷம் பகல் 1-53 வரை, சுபதினமன்று. ராகு 7-57—9-27

மாசி 20 செவ் (4-3-86) நவமி பி. இ. 2-52 வரை கேட்டை - மரணம் பகல் 12-36 வரை, அசுபதினம். ராகு 3-27—4.57

மாசி 21 புத (5-3-86) தசமி பி. இ. 1-06 வரை, மூலம் - மரணம் பகல் 11-26 வரை, சுபதினமன்று. ராகு 12-26—1-56

மாசி 22 வியா (6-3-86) ஏகாதசி இரவு 11-30 வரை, பூராடம் பகல் 10-25 வரை. சித்தம், ஸர்வஏகாதசி விரதம், அசுபதினம் ராகு 1—56—3-26

மாசி 23 வெள் (7-3-86) துவாதசி இரவு 10-10 வரை. உத்தராடம். சித்தம் காலை 9-36 வரை, நற்கருமங்கள் செய்யலாம். ராகு 10-56—12-26

மாசி 24 சனி (8-3-86) திரயோதசி இரவு 9-08 வரை, திருவோண்ம் காலை 9-04 வரை, சித்தம்.

சனிப்பிரதோஷ விரதம், மஹாசிவராத்திரி, ராகு 9-26—10-56

மாசி 25 ஞாயி (9-3-86) சதுர்த்தசி இரவு 8-30 வரை, அவிட்டம் - மரணம் காலை 8-54 வரை, அசுபதினம். ராகு 4-55—6-25

மாசி 26 திங் (10-3-86) அமாவாசை இரவு 8-22 வரை, சதயம்-சித்தம காலை 9-09 வரை, அமாவாசை விரதம், ராகு 7-55—9-25

மாசி 27 செவ் (11-3-86) பிரதமை இரவு 8-46 வரை, பூரட்டாதி - மரணம் காலை 9-56 வரை, அசுபதினம், ராகு 3-25—4-55

மாசி 28 புத (12-3-86) துவிதியை இரவு 9-54 வரை, உத்தரட்டாதி - சித்தம் பகல் 11-22 வ. முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 12-24—1-54

மாசி 29 வியா (13-3-86) திரிதியை இரவு 11-19வ. ரேவதி பகல் 1-05 வரை, சித்தாமிர்தம். நற்கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 1-53—3-23

மாசி 30 வெள் (14-3-86) சதுர்த்தி பி.இ. 1-22வ. அசுவினி பகல் 3-28 வரை, அமிர்தசித்தம், சதுர்த்தி விரதம். ராகு 10-52—12-22

## மஹா சிவராத்திரி

சிவன் ராத்திரி எனவும், சிவனுக்குரிய ராத்திரி எனவும் பொருள்படும் இத்தினம் சிவம் என்பது மங்களம், பெருஞ்சுகம் என்றெல்லாம் பொருள்படுவதனுல் விரதமனுட்டித்து சிவனை வணங்கி பேறடைவதற்குரிய காலமாகும்.

கற்பமுடிவுகாலத்தில் பிரம்மதேவன் சிருஷ்டித்தொழிலை மறைந்தபோது ஆன்மாக்கள் யாவும் பிரளயகாலத்தில் அழிந்துபோயின. அத்தினமிரவு சக்திதேவி சிவனைப் பூசித்து இத்தினத்தில் விரதமனுஷ்டிப்பவர் மோட்சமடைய வேண்டுமெனவும் ஒர்சமயம் பிரம்ம, விஷ்ணு இருவரும் சிறிது அகந்தைகொண்டு வாதம் செய்தபோது இறைவன் அவர்களை அடக்குவதற்காகச் சோதி வடிவமாக தோன்றினுர். அச் சோதிப்பிழம்பின் அடிமுடியைக் காணமுடியாத பிரம்ம விஷ்ணுக்களின் அகந்தையை அடக்க இறைவன் சோதியாக லிங்கோத்பவ மூர்த்தியாக காட்சியளித்ததே சிவராத்திரி தினமாகவும் புராண வரலாறுகள் எடுத்தியம்புகின்றன.

இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் மாசிமாத அபரபக்க திரயோதசி தினத்தில் ஒரு பொழுது உண்டு, சதுர்த்தசியின்போது (இரவில்) உபவாசமிருந்து துயில்நீக்கி இரவு நான்குயாமங்களிலும் இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் புரிந்து இறைதியானத்திலீடுபட்டு காலையில் நித்திய கடமைகள் முடித்து அடியார்களுக்கும் பிராமணர்களுக்கும் அன்னமளித்து பாரணை பண்ணல் வேண்டும். சிவாலயங்களில் சிறப்பாக நான்கு ஜாமங்களிலும், அபிஷேகங்கள், நிவேதன வகைகள் அளித்தல், வேதஸ்தோத்திர பாராயணங்கள் செய்தல் என்பன சிவராத்திரி தினத்திற்கு அனுட்டிக்கும் புண்ணிய கருமங்களாகும். லிங்கோத்பவ காலமெனும் நடுநிசி பன்னிரண்டுமணிக்கு அருவுருவத்திருமேனியாக மகாலிங்கத்திற்கு ஸ்ரீ ருத்திரபாராயணத்துடன் அபிஷேகம் செய்வது கோடி புண்ணிய பலனைத்தரும் என ஆகமங்கள் கூறுகின்றன இதையே ஸ்ரீருத்திரத்திலும்,

ஆபாதள நபஸ் தலாந்த புவன
ப்ரற் மாண்ட மாவிஸ்புரத்
ஜ்யோதிஸ் பாடிக லிங்கமௌலி விலசத்
பூர்ணேந்து வாந்தாம் ருதை!
அஸ்தே காப்லுதம் ஏகம்ஈசம் அனிசம்
ருத்ரானு வாகான் ஜபன்
த்யாயேத் ஈப்ஸித சித்தயே த்ருவபதம்
விப்ரோ அபிஷிஞ்சேத் சிவம்.

என்னும் திலோகம், பாதாளமுதல் ஆகசாம் வரையுள்ள எல்லையில்லாத ஜோதி வடிவமாகிய பிரகாசமான ஸ்படிகலிங்கத்திற்கு பிராமணர்கள் அபிஷேகம் செய்ய வேண்டும் என்பதை கட்டாயமாக வலியுறுத்துகின்றது. இவ்வாறு சகல பிரபஞ்சமும்; உயிரினங்கள் அடங்கியுள்ள லிங்கரூபமாக தோன்றிய சிவராத்திரியான மகா சதுர்த்தசி இரவில் அவ்விறைவனை ஜோதியை மனதில் தியானித்து மனதை அவனிடத்தில் செலுத்தி அவனது மகிமைகளை எம்மனதால் அடக்கி மனிதப் பேற்றின் பெரும் பயனைப் பெறுவோமாக! ஆ—ர்

பல அறிஞர்களால் பாராட்டப்படுவது
**திருக்கணித பஞ்சாங்கம்**


# உதயலிக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

## குரோதன ஹு மாசி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (13-2-86 முதல் 14-3-86 வரை)

| இங் பெப் | தமி மாசி | வாரம் | கும்பம் ம.மி. முதல் (காலே) | கும்பம் ம.மி. வரை (காலே) | மீனம் ம. மி. வரை (காலே) | மேடம் ம. மி. வரை (பகல்) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுன ம. மி. வரை (பி. ப) | கடகம் மி. ம. வரை (மாலே) | சிங்கம் ம. மி. வரை (இரவு) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலா ம. மி. வரை (இரவு) | விருச்சி ம. மி. வரை (பி. இ) | தனுசு ம. மி. வரை (பி. இ) | மகரம் ம. மி. வரை (பி. இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | வியா | 6 34 | 8 18 | 10 0 | 11 50 | 1 52 | 4 3 | 6 11 | 8 12 | 10 10 | 12 14 | 2 25 | 4 33 | 6 29 |
| 14 | 2 | வெள் | 6 30 | 8 14 | 9 56 | 11 46 | 1 48 | 3 59 | 6 7 | 8 8 | 10 6 | 12 10 | 2 21 | 4 29 | 6 25 |
| 15 | 3 | சனி | 6 26 | 8 11 | 9 53 | 11 43 | 1 45 | 3 56 | 6 4 | 8 5 | 10 3 | 12 7 | 2 18 | 4 26 | 6 22 |
| 16 | 4 | ஞாயி | 6 23 | 8 7 | 9 49 | 11 39 | 1 41 | 3 52 | 6 0 | 8 1 | 9 59 | 12 3 | 2 14 | 4 22 | 6 18 |
| 17 | 5 | திங் | 6 19 | 8 3 | 9 45 | 11 35 | 1 37 | 3 48 | 5 56 | 7 57 | 9 55 | 11 59 | 2 10 | 4 18 | 6 14 |
| 18 | 6 | செவ் | 6 15 | 7 59 | 9 41 | 11 31 | 1 33 | 3 44 | 5 52 | 7 53 | 9 51 | 11 55 | 2 6 | 4 14 | 6 10 |
| 19 | 7 | புதன் | 6 11 | 7 55 | 9 37 | 11 27 | 1 29 | 3 40 | 5 48 | 7 49 | 9 47 | 11 51 | 2 2 | 4 10 | 6 6 |
| 20 | 8 | வியா | 6 7 | 7 52 | 9 34 | 11 24 | 1 26 | 3 37 | 5 45 | 7 46 | 9 44 | 11 48 | 1 59 | 4 7 | 6 3 |
| 21 | 9 | வெள் | 6 4 | 7 48 | 9 30 | 11 20 | 1 22 | 3 33 | 5 41 | 7 42 | 9 40 | 11 44 | 1 55 | 4 3 | 5 59 |
| 22 | 10 | சனி | 6 0 | 7 43 | 9 25 | 11 15 | 1 17 | 3 28 | 5 36 | 7 37 | 9 35 | 11 39 | 1 50 | 3 58 | 5 54 |
| 23 | 11 | ஞாயி | 5 55 | 7 40 | 9 22 | 11 12 | 1 14 | 3 25 | 5 33 | 7 34 | 9 32 | 11 36 | 1 47 | 3 55 | 5 51 |
| 24 | 12 | திங் | 5 52 | 7 36 | 9 18 | 11 8 | 1 10 | 3 21 | 5 29 | 7 30 | 9 28 | 11 32 | 1 44 | 3 51 | 5 47 |
| 25 | 13 | செவ் | 5 48 | 7 32 | 9 14 | 11 4 | 1 6 | 3 17 | 5 25 | 7 26 | 9 24 | 11 28 | 1 39 | 3 47 | 5 43 |
| 26 | 14 | புதன் | 5 43 | 7 28 | 9 10 | 11 0 | 1 2 | 3 13 | 5 21 | 7 22 | 9 20 | 11 24 | 1 35 | 3 43 | 5 39 |
| 27 | 15 | வியா | 5 40 | 7 24 | 9 6 | 10 56 | 12 58 | 3 9 | 5 17 | 7 18 | 9 16 | 11 20 | 1 31 | 3 39 | 5 35 |
| 28 | 16 | வெள் | 5 36 | 7 20 | 9 2 | 10 52 | 12 54 | 3 5 | 5 13 | 7 14 | 9 12 | 11 16 | 1 27 | 3 35 | 5 31 |
| மார்ச் | | | | | | | | | | | | | | | |
| 1 | 17 | சனி | 5 32 | 7 16 | 8 58 | 10 48 | 12 50 | 3 1 | 5 9 | 7 10 | 9 8 | 11 12 | 1 23 | 3 31 | 5 27 |
| 2 | 18 | ஞாயி | 5 28 | 7 12 | 8 54 | 10 44 | 12 46 | 2 57 | 5 5 | 7 6 | 9 4 | 11 8 | 1 19 | 3 27 | 5 23 |
| 3 | 19 | திங் | 5 24 | 7 8 | 8 50 | 10 40 | 12 42 | 2 53 | 5 1 | 7 2 | 9 0 | 11 4 | 1 15 | 3 23 | 5 19 |
| 4 | 20 | செவ் | 5 20 | 7 4 | 8 46 | 10 36 | 12 38 | 2 49 | 4 57 | 6 58 | 8 56 | 11 0 | 1 11 | 3 19 | 5 15 |
| 5 | 21 | புதன் | 5 16 | 7 0 | 8 42 | 10 32 | 12 34 | 2 45 | 4 53 | 6 54 | 8 52 | 10 56 | 1 7 | 3 15 | 5 11 |
| 6 | 22 | வியா | 5 12 | 6 56 | 8 38 | 10 28 | 12 30 | 2 41 | 4 49 | 6 50 | 8 48 | 10 52 | 1 3 | 3 11 | 5 7 |
| 7 | 23 | வெள் | 5 8 | 6 52 | 8 34 | 10 24 | 12 26 | 2 37 | 4 45 | 6 46 | 8 44 | 10 48 | 12 59 | 3 7 | 5 3 |
| 8 | 24 | சனி | 5 4 | 6 48 | 8 30 | 10 20 | 12 22 | 2 33 | 4 41 | 6 42 | 8 40 | 10 44 | 12 55 | 3 3 | 4 59 |
| 9 | 25 | ஞாயி | 5 0 | 6 44 | 8 26 | 10 16 | 12 18 | 2 29 | 4 37 | 6 38 | 8 36 | 10 40 | 12 51 | 2 59 | 4 55 |
| 10 | 26 | திங் | 4 56 | 6 40 | 8 22 | 10 12 | 12 14 | 2 25 | 4 33 | 6 34 | 8 32 | 10 36 | 12 47 | 2 55 | 4 51 |
| 11 | 27 | செவ் | 4 52 | 6 36 | 8 18 | 10 8 | 12 10 | 2 21 | 4 29 | 6 30 | 8 28 | 10 32 | 12 43 | 2 51 | 4 47 |
| 12 | 28 | புதன் | 4 48 | 6 32 | 8 14 | 10 4 | 12 6 | 2 17 | 4 25 | 6 26 | 8 24 | 10 28 | 12 39 | 2 47 | 4 43 |
| 13 | 29 | வியா | 4 44 | 6 28 | 8 10 | 10 0 | 12 2 | 2 13 | 4 21 | 6 22 | 8 20 | 10 24 | 12 35 | 2 43 | 4 39 |
| 14 | 30 | வெள் | 4 40 | 6 25 | 8 7 | 9 57 | 11 59 | 2 10 | 4 18 | 6 19 | 8 17 | 10 21 | 12 32 | 2 40 | 4 36 |

இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.
உ-ம்: மாசி 30உ (14-3-86) மாலை 5-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (4-18—6-19) சிங்கலக்னம்

# மாசி மாதக் கிரகநிலை




## கிரக மாற்றங்கள்

13உ (25-2-86) காலை 8-47க்கு மீன-புத
20உ (4-3-86) காலை 6-58க்கு மீன-சுக்
24உ புதன் வக்ராரம்பம்.
26உ புதன் அஸ்தமனம்.
18உ குரு உதயம்.
10உ சுக்கிரன் உதயம்.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாசி | 1உ | (13-2-86) | பி.இ. | 4-33 | முதல் | மேடம் |
| | 4உ | (16-2-86) | மாலை | 4-53 | ,, | இடபம் |
| | 7உ | (19-2-86) | காலை | 5-33 | ,, | மிதுனம் |
| | 9உ | (21-2-86) | பகல் | 3-59 | ,, | கடகம் |
| | 11உ | (23-2-86) | இரவு | 11-11 | ,, | சிங்கம் |
| | 13உ | (25-2-86) | பி.இ. | 3-44 | ,, | கன்னி |
| | 16உ | (28-2-86) | காலை | 6-52 | ,, | துலாம் |
| | 18உ | (2-3-86) | காலை | 9-37 | ,, | விருச்சிகம் |
| | 20உ | (4-3-86) | பகல் | 12-36 | ,, | தனுசு |
| | 22உ | (6-3-86) | மாலை | 4-11 | ,, | மகரம் |
| | 24உ | (8-3-86) | இரவு | 8-56 | ,, | கும்பம் |
| | 26உ | (10-3-86) | பி.இ. | 3-40 | ,, | மீனம் |
| | 29உ | (13-3-86) | பகல் | 1-05 | ,, | மேடம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி மாசி மீ 30 உ மாலை 5-00 மணிக்கு சிங்க லக்னம் என அறிந்து கொண்ட பின் சிங்கம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

மாதம் பிறக்கும் போது கன்னிலக்கினம் உதயமாகிறது. இலக்கினாதிபதி, சூரியன் என்பன 6-ல் இருந்து செவ்வாய், சனியின் தீயபார்வையைப் பெறுவது அரசியல் நிலைமைக்கு நன்றல்ல. உயர் அதிகாரம் வகிப்பவர்களுக்கு கஷ்டமுண்டு. தேசிய நலன் பெரிதும் பாதிக்கப்படும். நாட்டில் வேலைநிறுத்தம், கலவரம் என்பன தலைதூக்கிய வண்ணம் இருக்கும். பலவகையிலும் அமைதியேற்படு[illegible]னம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உ[illegible] இயோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்[illegible] கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று.

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (மாசி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6 மணி 34 நிமிஷம்)

| வாரம் | 6...34 7...34 | 7...34 8...34 | 8...34 9...34 | 9...34 10...34 | 10...34 11...34 | 11...34 12...34 | 12...34 1...34 | 1...34 2...34 | 2...34 3...34 | 3...34 4...34 | 4...34 5...34 | 5...34 6...34 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கரும்ம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தி[illegible]த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்;

யாழ். வானியற் கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வெளியீடு இல.67

# மாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

13-2-86 — 14-3-86

சூரியன்: 12-2 86 இரவு மணி 9-49ல் கும்பராசிப் பிரவேசம்.
13-2-86 உதயம் காலை 6-34
அஸ்தமனம் மாலை 6-15
14-3-86 உதயம் காலை 6-22
அஸ்தமனம் மாலை 6-18

சந்திரன்: 17-2-86 பூர்வாஷ்டமி பகல் 2-46
24-2 86 பூரணை இரவு 8-33
4-3-86 அபராஷ்டமி அ.கா. 4-47 a.m.
10-3-86 அமாவாசை இரவு 8-22

## கிரகங்கள்

புதன்: மாதாரம்பத்தில் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 18-2-86ல் மேற்கில் உதயமாகிறது. 28-2-86ல் சூரியனிலிருந்து 18 பாகை உயரத்திற் காணப்படும். 8-3-86ல் வக்கிரகதியடைந்து 10-3-86ல் மேற்கில் அஸ்தமனமடைந்துவிடும். 25-2-86ல் மீனராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாதாரம்பத்தில் சூரிய உதயம் முன் கீழ்வானில் 77 பாகை உயரத்திற் காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் உச்சியிற்காணப்படும் இம்மாதம் முழுவதும் விருச்சிகராசியிலேயே சஞ்சரிக்கிறது.

சுக்கிரன்: மாதாரம்பத்தில் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 22-2-86ல் மேற்கில் உதயமாகிறது. மாதமுடிவில் சூர்யாஸ்தமனத்தின் மேல் மேற்கு வானில் 13 பாகை உயரத்தில் காட்சியளிக்கும். 4-3-86ல் மீனராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாதாரம்பத்தில் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 2-3-86ல் கிழக்கில் உதயமாகும். மாதமுடிவில் சூரிய உதயம்முன் கீழ்வானத்தில் 18 பாகை உயரத்திற் காணப்படும். 21-2-86ல் கும்பராசியில் சதயம் 1-ம் பாதத்திலும் 5-3-86ல் சதயம் 2-ம் பாதத்திலும் பிரவேசிக்கிறது.

சனி: மாதத் தொடக்கத்தில் சூரிய உதயம் முன் கீழ் வானில் 74 பாகை உயரத்திற் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் உச்சிக்கு 13 பாகை மேற்கில் காணப்படும். இம்மாசம் முழுவதும் விருச்சிகம் 4-ம் பாதத்திலேயே சஞ்சரிக்கிறது.

இந்திரன் (Uranus): இம் மாதம் முழுவதும் விருச்சிக ராசியில் கேட்டை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune): இம்மாசம் முழுவதும் தனுராசியில் மூலம் 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto) இம்மாதம் முழுவதும் துலா ராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

17-2-86 பகல் செவ்வாய்க்கு தெற்கில் கேட்டை நட்சத்திரம் 5 பாகை. அன்று உதயம் முன் அவதானிக்கவும்.

18-2-86 அதிகாலை செவ்வாய்க்கு வடக்கு சனி $1\frac{1}{2}$ பாகை. உதயம் முன் பார்க்கவும்.

3-3-86 நள்ளிரவு சந்திரனுக்கு வடக்கு செவ்வாய் 4 பாகை. உதயம் முன் அவதானிக்கவும். சந்திரன், சனி, செவ்வாய் மூன்றும் முக்கோணமாய் அமைந்திருப்பதையும் அதற்குத் தெற்கே கேட்டை நட்சத்திரம் காணப்படுவது அழகிய காட்சியாகும்.

8-3-86 மாலை சுக்கிரனுக்கு வடக்கு புதன் 5 பாகை. அஸ்தமனத்தின் மேற்கு அடிவானத்தின் மேல் பார்க்கவும்.

11-3-86 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் $1\frac{1}{2}$ பாகை.

## ஹலீஸ் வால் நட்சத்திரம்

19-2-86-ல் $1\frac{1}{4}$ மணியும
1-3-86-ல் $2\frac{1}{4}$ மணியும்
11-3-86-ல் $3\frac{1}{4}$ மணியும்

சூரியோதயத்துக்கு முன் தென்கிழக்கில் உதயமாவதால் சூரியோதயத்துக்கு முன் குறித்த கால எல்லையுடன் அவதானிக்கவும். 4-வது ஒளிவகுப்பினையுடைய நட்சத்திரம்போல் தோற்றுவதால் ஆகாயம் நிர்மலமாய் இருக்கவேண்டும். தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் இலகுவாக பார்க்க முடியும்

# கும்ப லக்ன ஆணும் மிதுன லக்னப் பெண்ணும்

## சேர்வது நன்மையானதா?

வே. சின்னத்துரை — நல்லூர்

கும்ப லக்கின காரர் உலகத்தில் மிக அக்கறை கொண்டவர். அதோடு ஒரு சீர்திருத்தவாதியும் கூட. எந்த நேரத்திலாவது அறிவு மட்டத்தில் தன்னுடன் அளவளாவிக்களைப்பதற்கு அவர் தான் செய்யும் வேலை எல்லாவற்றையும் விடுத்து தான் சொல்வதைச் செவிமடுக்கவேண்டும் என்று அவர் விரும்புவார். தனக்கு விருப்பமில்லாத வேலைகளைச் செய்துகொண்டிருக்கும் மிதுனகாரி இதை ஒரு சாட்டாக வைத்து அதை மதிப்பாள். பல நண்பர்கள் மாறுவதை இருவரும் ஒத்துப் போவர்கள். தமது அக்கறைகள் மாறுவதிலும் ஒத்துப் போவார்கள். தன் சொந்த உறவுகளில் வெளி அன்புகள் வந்து பாதிப்பதை அவள் விரும்பமாட்டாள். தன் நண்பனுடைய பிரச்சனைகளை தீர்த்துவைக்குமட்டும் அவளைக் காத்திருக்கப் பண்ணுவது அவளுக்கு சலசலப்பை உண்டுபண்ணும். வளைந்துகொடுக்கக் கூடிய ஒருத்தி இப்படி ஒரு சின்ன விடயத்திற்காக ஏன் முரண்படுகிறாள் என்பதை அவனால் விளங்க முடியாது. அவளிடம் அவன் தன்னை ஒப்புவித்து விட்டால் அவளுடன் மிகவும் நேர்மையாகவும், அவள் செய்யும் எக்காரியத்திலும் அக்கறை கொண்டவனுமாகவிருப்பான். அதன்பின் அவளுடைய இரம்மியமானவைகளையே பொருட்படுத்துவான்.

வெளி விவகாரங்கள் இருவருடைய பாலியல்புகளிலிருந்து கவனத்தை மாற்றிவிடும். ஏனெனில் அவர்களை சுற்றிவர அனேக விஷயங்கள் படர்ந்து கொண்டிருப்பதனால், அவர்களுக்கு அவகாசமிருந்தால் அவர்கள் மனதிற்கு தெம்பூட்டத் தேவையில்லை. இருவருடைய கலப்பிலும் ஏதோ ஒன்று இல்லாத குறைபோல் மிதுனகாரிக்கு சிலவேளையில் படும். ஆனால் இந்த எண்ணத்தை ஆழமாக தேடுவதற்கு அவளுக்கு நேரமில்லாதிருக்கும்;

இது ஒரு நல்ல கலப்பு. ஆனால் ஸ்தூலமான கலப்பல்ல;

மதிப்புரை:

# ஆரம்ப விண்ணியல்

ஆசிரியர்: W. S. செந்தில்நாதன்
(தலைவர், யாழ். வானியற் கழகம்)

வானியல் அல்லது விண்ணியல் மிகப்பூர்வீகமான சாஸ்திரமாகும். அது இந்த நூற்றாண்டில் மிகமிக வளர்ந்துள்ளது. மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும். இது சம்பந்தமான புத்தகங்கள் பல பாஷைகளிலும் காலத்துக்குக் காலம் வெளிவந்துகொண்டே இருக்கின்றன. ஆனால் தமிழில் முக்கியமாக இலங்கையில வெளிவந்த நூல் இதுவேயாகும்.

சூழல் என்ற பாடத்திட்டத்தில் பூமியோடு சம்பந்தப்பட்ட விஷயங்களே முன்கற்பிக்கப்பட்டன. வானியல் சூழலில் இடம்பெறாத பெருங்குறையைக் கல்விப் பகுதியினர் இப்போது நீக்கியுள்ளார்கள். அதனால் மாணவர்களும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசியர்களும் செய்வதறியாது திக்குமுக்காடிய நேரத்தில் இந்நூல் ஓர் கலங்கரை விளக்கம்போல் உதவுமென்பது நிச்சயம்.

ஆசிரியர் இந்நூலை ஆரம்ப நூலாகவே எழுதியுள்ளார். அதனால் யாவரும் இந்நூலை வாசித்து விண்ணியலின் ஓர் ஆரம்ப அறிவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

ஆசிரியர் தூயதமிழில் வேண்டிய விளக்கப் படங்களுடன் அழகுற வெளியிட்டது மிகவும் போற்றத்தக்கது.

வாசகர்களின் அமோக ஆதரவு இருக்குமென்பதும் இந்நூல் மேலும் திருத்தங்களுடன் பதிப்பிக்கப்பட்டு, ஆசிரியரின் ஆழ்ந்த விண்ணியல் நூல்களை வெளிக்கொணரவும் உதவுமென்பதும் எமது நம்பிக்கை.

விலை ரூபா 18/-
கிடைக்குமிடம்: 167, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.


ந.க.

---


விரைவில் வெளிவருகிறது!

க்ஷய வருஷ

திருக்கணித பஞ்சாங்கம்



# இம்மாதம் உங்களுக்கு எப்படி

## இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.

## 13-2-86 முதல் 14-3-86 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



### மேடம்

**அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்**

இந்த இராசிக்காரருக்குச் சூரியபகவான் 11-ல் லோகமூர்த்தியாகி வலம்வருவது சுபாசுப பலன்களைக் கொடுக்கும். இவருடன் குருவும் சேர்ந்து பலம்பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். இராசாங்க உதவி, பெரியோர் உதவிகள் அவ்வப்போது கிட்டும். தேகசுகம் சுமாராக இருக்கும். அட்டமத்தில் சனி, செவ்வாய், யுரேனஸ் சஞ்சாரம் எதிர்பாராத திடீர நெருக்கடிகள், விபத்துக்களை ஏற்படுத்தும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பவருமானம் அதிகரிக்கும்; குடும்பத்தில் விவாகாதி மங்கல வைபவங்கள் நிகழும். குடும்பசுகவீனமும் உண்டு.

வர்த்தகர்களுக்கு முதலீடுக்ளில் வருமானங்கள் அதிகரிக்கும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் சிறக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளைச் சமாளிப்பதில் சிரமமேற்படும். ஆனல் பதவி முன்னேற்றமுண்டு சக உத்தியகாகத்தர்களின் ஆதரவு கிட்டும்.

விவசாயிகட்கு பயிர் உற்பத்தி பாதிப்படையும். விவசாயத்தில் சுமாரான வருமானம் கிட்டும். பசளை - மானியம் முதலியன கிடைக்கும்.

தொழிலாளிகளுக்கு வேலை வசதிகள் திருப்தியளிக்கும். தொழில் பிணக்குகள் அவ்வப்போது தோன்றி மறையும். எனினும் தொழிலாளிகள் மத்தியில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் கிட்டும். நாட்கூலி வேலைசெய்வேகர் முன்னேறுவர்.

மாணவர்க்கு பலவித சோதனைச் சூழ்நிலைகளிலும் கல்வியில் ஊக்கமும் முன்னேற்றமும் அதிகரிக்கும். பரீட்சை முடிவுகள் திருப்திதரும், சட்டத்துறை மருத்துவத்துறை மாணர் சிறப்பான பலன் பெறுவர்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகள் கைகூடும். குடும்ப வருமானமும், கணவனின் அன்பும் சந் தோஷம் தரும். இடையிடையே துக்க சம்பவங் களும் ஏற்படலாம்.

அதிஷ்ட நாட்கள். பெப் 15,19,20,24,25
மார் 4பி.ப.,5.9,10,14

துரதிஷ்ட நாட்கள்: பெப் 13, 26 பகல், 27
மார் 2 பக, 3, 4 மு.ப.11,12




கார்த்திகை 2 3 4, ரோகிணி, மிருகசிரிடம் 1,2

இடபராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபக வான் 10ல் சுவர்ணமூர்த்தியாகிப் பூரண பலத்து டன் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். தேக சுகம், குடும்பசுகம் என்பன சீராக இருக்கும். பொருள் வருமானம் அதிகரிக்கும்.தொழில் சிறப்பு காரியசித்தி ஏற்படும்.இராசாங்க உதவிகள் கிடைக் கும் குரு பகவான் துர்க்கோசர சஞ்சாரம் செய்த லின் காரியத்தடை தாமதங்கள், இடப்பெயர்ச்சி பந்துசனதுன்பம் முதலானவையும் கலந்து நிகழ வும் இடமுண்டு. செவ்வாயும் சனியும் யுரேனசும் சேர்ந்து சஞ்சாரம் செய்வதுடன் திருஷ்டியும் இந்தராசிக்கு ஏற்படுதலின் களத்திர புத்திர துன் பம் சோர சத்துரு அக்கினி ஆயுதபயம் முத லான பலன்களும் சிலருக்கு இடம்பெறவும் கூடும்.

குடும்பத்தவர்களுக்குக் களத்திர சுகவீனங் கள் இடைக்கிடை ஏற்பட்டாலும். குடும்ப நல் லுறவு வளர்ச்சி காணும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். பெரியோர்களின் உதவி கிடைக்கும்

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் ஏற்படும். ஆனல் வங்கி-நிதி வசதிகள் குறைவு றும். முதலீடுகள் மத்திம லாபம் தரும்; வாடிக்கையாளர் நல்லெண்ணம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்ச்சி அல் லது பதவிச் சிறப்புக்கள் கிடைக்கும், சக ஊழி யர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பதவிப் பொறுப்புக்களும் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி காணி சம மான அளவு முன்னேற்றம் பெறும். ஆனல் பயிர் அழிவும் ஏற்படவே செய்யும். கூலியாட்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்;

தொழிலாளர் மத்தியில் தொழிற் பிணக்கு கள் குறைவுறும். ஓரளவு வேலைவாய்ப்புகளும் கிடைக்கும். நாள்கூலி வேலையாட்களுக்கும் போதிய வருமானம் கிடைக்கும். தொழில் ஒப் பந்தம் லாபந்தரும்.

மாணவர்கள் கல்வியூக்கம் பெறுவர். கலைத் துறை, கணித, விஞ்ஞானத்துறை மாணவருக்கு கூடிய முன்னேற்றம் ஏற்படும். பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்தியளிக்கும்.

பெண்களுக்கு செவ்வாய் 7ல்இருத்தலின் பலப் பல பிரச்சினைகள் அவ்வப்போது தோன்றவே செய்யும். கன்னிப் பெண்களின் விவாக முயற்சி கள் சிரமங்களைக் கொடுக்கும். குடும்ப சுகவீனம் குடும்பச் செலவுகளும் கவலை தரும்.

அதிஷ்டநாட்கள்: பெப் 13,17,18,21பி.ப,22,23
மார்ச். 6இரவு,7,8பகல்,11,12

துரதிஷ்டநாட்கள்: பெப். 14பகல்,15,16பகல்,
மார்ச். 1,4,பி.ப,5,6,பகல்,14;




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

மிதுனராசியில் செனனமானவர்களுக்கு சூரிய பகவான் இம்மாதம் 9ல் தாம்மூர்த்தியாகிப் பலம் குறைவுடன் சஞ்சாரம் செய்வது நன்மை கலந்த தியபலன்களையே அதிகம் கொடுக்கும். எனினும் குருபகவானும் செவ்வாயும் கோசார பலப்பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர் களுக்குத் தேகசுகம் சுமாராக இருக்கும். வருமா னம் அதிகரிக்கும். பெரியோர் உதவிகள் அன்னி யர் உதவிகள் கிடைக்கும். சிலருக்கு அன்னிய நாட்டுப் பொருள்வருமானம்கூடக் கிடைக்கும்; தடைதாமதங்களுக்குமேல் காரியசித்தியுமடைவர்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளர்ச்சிபெறும். இதுகாலமும் தடைப்பட்டிருந்த விவாகாதிமுயற்சிகள் நற்பலன்தரும். குடும்பவரு மானம் அதிகரிக்கும். பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் படிப்படியாக ஏற்படும். முதலீடுகள் லாபம்தரும். இராஜாங்க அதிகாரிகளின் தண்டனைகளுக்கு உள்ளாகவேண்டியும் நேரலாம். புதுமுதலீடுகள் செய்யலாம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளால் அடிக்கடி துன்புறுத்தப்பட நேர்ந்தாலும் பதவிச்சிறப்புக்கள் குறைவுருது. சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வருமானமும் செலவுக்கு ஈடுசெய்யாது.

விவசாயிகட்கு பயிருற்பத்தி வளர்ச்சிகாணும் கூலியாட்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும். பண்ணை விவசாயிகள் விளைவுகள் அதிகரிக்கும். சந்தை வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலாளர் வேலைவாய்ப்பக்கள் அதிகரிக்கும். தொழிற் பிணக்குகள் சுமுகமாகத் தீரும். நாட்கூலி வேலையாட்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும். தொழில் ஒப்பந்தங்கள் லாபந்தரும்.

மாணவர் கல்வித்தடைகள் படிப்படியாக விலகிச் செல்லும். சுயமுயற்சியுடன் மாணவர் கல்வியூக்கத்தில் முன்னேறுவர். சட்டத்துறை மாணவர் கல்வியில் விசேடசித்தி பெறுவர்.

பெண்களுக்கு பலவழிகளிலும் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். காதல் விவகாரங்களில் வெற்றிபெறுவர். விவாகமுயற்சிகள் சித்தியடையும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பும் ஆதரவும் ஒருங்கே கிடைக்கும்'

அதிஷ்ட நாட்கள்: பெப் 15,20,24 25,28பக.
மார்ச் 1காலை,29,10,14.

துரதிஷ்ட நாட்கள்: பெப் 16 17,18.
மார்ச் 2,3,6,7.



## கடகம்

புனர்பூசம் 4ம்கால், பூசம், ஆயிலியம்

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் அட்டமத்தில் ரஜஸமூர்த்தியாகிப் பவனிவருகின்றார். இவருடன் குருபகவானும் சேர்ந்து துர்க்கோசார சஞ்சாரம் செய்வதும் நன்மை தராது. பொதுவாக இவர்களுக்கு தேகசுகம் அடிக்கடி பாதிக்கப்படும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்கு சிரசு - வயிறு சம்பந்தமான பிணி பீடைகள் சத்திரசிகிச்சைப் பயம் முதலானவையும் இடம்பெறலாம். தடை தாமதங்களின்மேல் அற்ப காரியசித்தியும் சிலருக்கேற்படும். தசாபுத்தி அந்தரபலமில்லாதவர்கள் தட்சணாமூர்த்தி - சிவன் வழிபாடுகளைச் செய்து வரச் சாந்தியுண்டாகும்.

குடும்பத்தவர்களுக்கு பலவழிகளிலும் சிக்கல்களும் சோதனைகளும் ஏற்படும். மனைவி - மக்கள் பிணி பீடைகள் முதலியன எதிர்பாராத திடீர் நெருக்கடிகளையும் ஏற்படச் செய்யும். கணவன் மனைவி நல்லுறவும் பாதிக்கப்படும்:

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலைதொடரும். நிதிவசதிகள் குறைவுறும். வாடிக்கையாளரின் வரவும் குன்றும். முதலீடுகளிலும் லாபம் கிடையாது.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பதவியிறக்கம் - பதவி நீக்கம் கூடச் சிலருக்குக் கிடைக்கும். கஷ்டப்பிரதேச இடமாற்றமும இடம்பெறும்.

விவ்சாயிகட்கு பயிர் பாதுகாப்பில் பல சிரமங்கள் ஏற்படும். கூலியாட்கள் சமயத்தில் கைவிட்டுவிடுவார்கள். சந்தைவாய்ப்பும் குறைவுறும்

தொழிலாளிகட்கு வேலைவாய்ப்புக்சள் குறைவுறும். தொழிளாளர் மத்தியில் ஒற்றுமை குறைவுறும். தினச்சம்பள வேலையாட்களுக்கு சிவியம் கஷ்டத்தைக் கொடுக்கும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடருவதால் கல்விமுன்னேற்றம் பெரிதும் பாதிப்புறும். மாணவர் மத்தியில் வெறுப்பு - விரக்தி - அமைதியின்மை - மறதி முதலான குணங்கள் தோன்றும்: பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்திதராது.

பெண்களுக்கு எச்சரிக்கையான காலம். உணர்ச்சிவசப்படுதல் திடீர் முடிவுகள் இவர்களை ஆபத்தில் மாட்டிவிடும். கணவன் மனைவி பிணக்குகள் கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது தோன்றும்.

அதிஷ்ட நாட்கள்! பெப்13,16,17,18,22,23,27.
மார்ச் 2,3,4,11,12;

துரதிஷ்ட நாட்கள்! பெப் 19,20,21.
மார்ச் 5,6,8,9,10.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இந்தராசியில் பிறந்தவர்களுச்கு இந்தமாதம் சூரியபகவான் 7ல் லோகமூர்த்தியாகிப் பலக்குறைவுடன் சஞ்சாரம் செய்வது நற்பலன்களை அதிகம் குறைவடையவே செய்யும். ஆனல் சுபகோசாரத்தில் குருபகவானும் சேர்ந்து சஞ்சரித்தலின் எதனையும் சமாளித்தும் விடுவார்கள். தேகநலம் குடும்பநலம் என்பன சமசீராக இருக்கும். பொருள் வருமானம், பெரியோர் உதவிகள் அதிகரிக்கும். ஆனல் எதிர்பாராத திடீர்ச் செலவுகளால் வருமானப் பற்ருக்குறைவும் இடம்பெறும். குடும்பத்தில் சுபமங்கள காரியங்களும் இடம் பெறும். தடைதாமதங்களுடன் கூடிய காரிய வெற்றியும் சிலருக்குக் கிடைக்கும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பநல்லுறவு அபிவிருத்தியடையும். குடும்பவருமானம் திருப்தி தரும். குடும்பப் பெரியவர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றம் காணும். புதிய முதலீடுகள் செய்யலாம. பவுண் பொன் வியாபாரிகள் அதிகலாபம் பெறுவர். மாதப் பிற்பகுதியில் வியாபார லாபங்கூடும்,

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பணிப்புக்களை நிறைவேற்ற முடியாத கருமசங்கட நிலை அடிக்கடி ஏற்படும். சகல ஊழியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கை பலவழிகளிலும் சிரமங்களைக் கொடுக்கும். பூச்சிகளாலும் இயற்கை ஏதுக்களாலும் பயிரழிவுகள் அதிகரிக்கும். சந்தைவாய்ப்பும குறைவுறும்.

தொழிலாளர் மத்தியில் தொழில் பிணக்குகள் கவலைதரும். வேலைவாய்ப்புக்கள் கிடைத்தாலும் வருமானம் சுரண்டல்களுக்குள்ளாகும். தொழில் ஒப்பந்தங்கள் எதிர்பார்த்த லாபம் தரமாட்டாது.

மாணவர் கல்வியூக்கம் ஆக்கம் தரும். ஆசிரியர் மாணவர் நல்லுறவு வளரும். சட்டத்துறை மாணவர் சிறப்புச் சித்தியடைவர்.

பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான காரியசித்தி பெறுவதற்கு நவநாயகர் உதவிசெய்வார். இவ்வளவு காலமும் தடைப்பட்டிருந்த விவாக முயற்சிகள் கைகூடும். குடும்பப் பெண்களுக்குக் கணவன் மாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 15,16பகல்,19பகல் 20, மார்ச். 1,4பி.ப5,6பகல்,
துரதிஷ்டநாட்கள்: பெப். 18,21பி.ப22,23 மார்ச். 6இரவு,7,8பகல்



# கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1,2 கால்

கன்னியா இராசியில் பிறந்தவர்களுக்குச் சூரியபகவான் இந்தமாதம் 6ல் தாம்ர மூர்த்தியாகி தானபலம் பெற்றுச் சமபெலத்துடன் சஞ்சாரஞ் செய்வது நன்மை கலந்த தீயபலன்களையே செய்யும். தேகசுகம், குடும்பசுகம், சுமாராக இருக்கும். பொருள் வருமானமும் கணிசமான அளவு பெருகும். ஆனல் எதிர்பாராத திடீர்ச் செலவினங்களும் இருக்கும். சிலருக்கு அந்நியர் உதவி, அந்நிய தேச சஞ்சாரம், அந்நிய நாட்டுப் பொருள் வரவு முதலானவையும் கிடைக்கும். எந்த விஷயத்திலும் முன் எச்சரிக்கையாக இருப்பது இவர்களுக்கு நன்மைதரும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப வருமானம் சீராக இருக்கும். ஆனல் குடும்ப சுகவீனங்கள் பகை விரோதங்களும் இடைக்கிடை துன்பந்தரும். புத்திரர் உதவி கிடையாது.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபந்தரமாட்டாது. வியாபாரம் கடந்தகாலங்களிலும் பார்க்க மந்த நிலையை அடையத் தொடங்கும்; வாடிக்கையாளரின் வரவும் குறைவுபடும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு குறைவுறுதலால் அதிகாரிகளைத் திருப்திப் படுத்த கடினமாக வேலைசெய்யவும் நேரலாம்.

விவசாயிகளுக்கு விவசாயி பலம் பெறுவ்தால் உற்பத்தி கணிசமான அளவு வளர்ச்சிகாணும். ஆனல் இயற்கை செயற்கைப் பயிரழிவுகளும் இருக்கும். பண்ணை விவசாயம் [illegible]லும்.

தொழிலாளருக்குள் ஒத்துழைப்பும் ஒற்றுமையும் வளர்ச்சிபெறும். வேலைவாய்ப்புக்கள் சுமாராகவே கிடைக்கும். தொழில் ஒப்பந்தங்கள் சம அளவு பலன் தரும்.

மாணவர்கல்வி முன்னேற்றம் கடந்த காலங்களிலும்பார்க்க குறையத்தொடங்கும். ஆசிரியர் மாணவர் கருத்து மாறுபாடுகள் வலுவடையும்; கல்வித்தேர்ச்சியும் திருப்திதராமலும் போகலாம்.

பெண்கள் கடந்தகாலங்களில் அனுபவித்து வந்த சுகபோகங்கள் குறைவுறத் தொடங்கும். விவாகப் பிரச்சினைகள் தோன்றும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் ஆதரவு குறைவுறும்.

அதிஷ்டநாட்கள்: பெப். 17,18,22,23,27
மார்ச். 2பகல்,3,6இரவு,7,8ப.

துரதிஷ்டநாட்கள்: பெப். 14பகல் 15,16பகல், 24.
மார்ச் 8இரவு9, 10, 13பி.ப14




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1 2,3

துலாராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 3ல் சுவர்ணமூர்த்தியாகிப் பலம் பெறுவது நன்மையாகும். இவருடன் குருவும் சேர்ந்து சுப கோசரசஞ்சாரம் செய்வது குறிப்பிடக்கூடிய சுப சகுனமாகும். இவ்வளவு காலமும் பட்ட கஷ்டநஷ்டங்களிலிருந்து படிப்படியாக இவர்களுக்கு விடுதலை ஆறுதல் கிடைக்கும். தேக சுகம் குடும்பசுகம் என்பன திருப்திதரும். வருமானம் அதிகரிக்கும். வீட்டில் சுபசந்தோஷ கொண்டாட்டங்கள் நிகழும். ஆனால் ஏழரைச்சனீஸ்வரனும் 2ல் செவ்வாயுமாகச் சஞ்சாரம் செய்தலின் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் பொருள் நட்டங்கள் முதலான பலன்களும் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப சுகவீனங்கள் துன்பம்தரும். குடும்பவருமானம் திருப்தி தரும். பெரியவர்கள் புத்திரர் உதவிகள் கிடைக்கும். வீட்டில் விவாகாதி மங்கல நிகழ்ச்சிகளும் நிகழும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் லாபம் கிடைக்கும், நிதிவசதிகளும் திருப்திதரும். அழகு சாதனப் பொருள் வியாபாரிகள் நன்மைபெறுவர்; புது ... செய்ய உகந்தகாலம்.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் மனநிறைவுதரும். சிலருக்குப் பதவியுயர்ச்சி கிடைக்கும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பு கிடைக்கும்;

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி பெரிதும் பாதிப்புறும். இயற்கை செயற்கை ஏதுக்களால் பயிர்ச்சேதம் தவிர்க்கமுடியாதபடி அதிகரிக்கும். கடன்பயமும் ஏற்படும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக்கள் குறைவடையும். தொழில் பிணக்குகள் கவலைதரும். ஒப்பந்த தொழில்களும் நன்மைதரமாட்டாது.

மாணவர் கல்விக்குழப்ப நிலையிலும் கல்வி ஊக்கம் அதிகரிக்கும். ஆசிரியர் மாணவர் நல்லுறவு பேணப்படும். சட்டத்துறை மருத்துவத்துறை மாணவர் விசேடசித்தியும் பெறுவர்.

பெண்களுக்கு காதல் விவகாரங்களில் நம்பிக்கையேற்பட்டாலும் தடை தாமதங்களே தொடரும். கணவன் மனைவியருக்கிடையில் கருத்து வேறுபாடுகளும் அடிக்கடி ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: பெப் 19,20,24,25,28;
மார்ச் 1,5,6,9,10.

துரதிஷ்ட நாட்கள்: பெப் 13,16,17,18,26,27;
மார்ச் 11,12,13.




விசாகம் 4-ம்கால், அனுஷம், கேட்டை.

இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 4ல் ரஜதமூர்த்தியாகி சஞ்சாரம் செய்வது நன்மை தீமை கலந்த பலன்களே அதிகம் நிகழும். மேலும் ஏழரைச் சனீஸ்வரனின் குரூர கோசார சஞ்சாரமும் சேர்ந்து நிகழுதலால் நன்மையிலும் தீயபலன்களே அதிகரிக்கலாம். தேகசுகம் குடும்பசுகம் என்பன அடிக்கடி பாதிப்புறும்; வருமனத்திலும் செலவுகள் அதிகரிக்கவே செய்யும். எதுவும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையில் ஏமாற்றப்பட்டாலும் ஆச்சரியமில்லை. பொருள் நட்டம் அலைச்சல் பகைவிரோதம், மன அமைதியின்மை முதலான பலன்களே இவர்களுக்கு அதிகம் நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு கணவன் மனைவி உறவு பாதிப்புறும். குடும்பத்தில் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் அடிக்கடி ஏற்பட்டுத் துன்பம்தரும். புத்திரர் உதவிகள் குறைவுறும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்தநிலைதொடரும். புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நன்மைதரும். வங்கி - நிதி வசதிகளும் திருப்திதரமாட்டாது.

உத்தியோகத்தர்கட்கு வேலைப்பொறுப்புக்கள் வேதனைதரும். பதவியிறக்கம் அல்லது சிலருக்குப் பதவிநீக்கம்கூட ஏற்பட்டாலும் ஆச்சரியமில்லை.

விவசாயிகளுக்கு பயிரழிவு இந்தமாதம்தொடரும். கூலியாட்கள் சமயத்துக்கு உதவாமற்போய் விடுவார்கள். சந்தைவாய்ப்பும் லாபம் தரமாட்டாது.

தொழிலாளர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் தொடரும். தொழிற்பிணக்குகளும் அமைதிக்குறைவை உண்டுபண்ணும். தொழில் ஒப்பந்தங்களும் சிரமங்களையே கொடுக்கும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். மாணவர் மத்தியில் சோம்பல், அக்கறையின்மை,மறதி முதலான குணங்கள் கல்வித்தேர்ச்சியைப் பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகளில் தடை தாமதங்கள் சிக்கல்கள் ஏற்படும். குடும்பப்பெண்களுக்கு கணவன்மாரின் நல்லெண்ண நம்பிக்கை குன்றும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும் சிரமங்களே அதிகரிக்கும்.

அதிஷ்ட நாட்கள்: பெப் 13,22,23 26,27.
மார்ச் 3,4,7,8,11,12.

துரதிஷ்ட நாட்கள்: பெப் 14,15,16 20.
மார்ச் 1,2,13,14.



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ம்கால்

இவ்விராசியில் ஜனனமானவர்களுக்குச் சூரிய பகவான் 3ல் லோகமூர்த்தியாகப் பவனிவருவது நன்மை தீமை கலந்த பலன்களையே கொடுக்கும். இவருடன் குரூர கோசாரத்தில் வியாழபகவான் சஞ்சரித்தல் நன்மைதரமாட்டாது. அத்துடன் ஏழரைச் சனீஸ்வரனின் காலமும் தொடருவதும் குறிப்பிடத்தக்கது. பொதுவாக இவர்களுக்குத் தேகசுகம் குடும்பசுகம் என்பன அதிகம் பாதிப்புறும். மனஅமைதி குன்றும். எடுத்தகாரியங்கள் எல்லாம் தோல்வி அல்லது ஏமாற்றங்களைக் கொடுக்கலாம். சிலருக்கு விபத்து அவமிருத்து பயங்கூட ஏற்படலாம். குரு-சனி வழிபாடு நலம் தரும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்ப சுகவீனம் முதலியன கவலை தரும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் பிணக்குகள் சச்சரவுகள் இடம்பெற்றாலும் ஆச்சரியமில்லை.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் எதிர்பாராத விதமாக நட்டம் கொடுக்கத் தொடங்கும். வாடிக்கையாளரின் வரவும் குறையும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று.

உத்தியோகத்தர்களுக்குச் சூரியன் மூர்த்தி பலம் குறைந்தாலும் ஸ்தானபலம் பெறுவதால் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஓரளவு நற்பலன் கிட்டும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்புக் குறைவுறும்.

விவசாயிகட்கு பயிர் உற்பத்தி பெரிதும் பாதிப்படையும். மானியம், பசளை முதலியன காலத்தில் கிடையாது. உற்பத்திச் செலவுகளின் அதிகரிப்பால் வருமானம் குன்றும். கடன்பயமும் ஏற்படலாம்.

தொழிலாளர் பிணக்குகள் பிரச்சனைகள் வலுவடையும். வேலைவாய்ப்புக்கள் குன்றும். தொழில் ஒப்பந்தங்களும் லாபம் தரமாட்டாது.

மாணவர்கட்கு கல்விமுன்னேற்றம் பெரிதும் தடைப்படும். ஆசிரியர் - மாணவர் உறவில் விரிசல் ஏற்படலாகும். பரீட்சைப் பெறுபேறுகளும் திருப்திகரமாக அமையமாட்டாது.

பெண்களுக்கு அதிலும் கன்னிப் பெண்களுக்குச் சோதனையான காலமாகும். காதல் விவகாரங்கள் ஏமாற்றம் தரும். குடும்பப் பெண்களுக்கு குடும்பபாரம் கஷ்டத்தை உண்டாக்கும்,

அதிஷ்ட நாட்கள்: பெப் 14 பி.ப. 15, 24,25
மார் 1, 4 பி.ப. 5,6,9, 10, 18

துரதிஷ்ட நாட்கள்: பெப் 16 இரவு, 17,18,22,23
மார் 2 பகல், 3, 4 மு. ப.



## மகரம்

**உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1,2**

மகரராசியில் பிறந்தவர்களுக்கு இம்மாதம் சூரியபகவான் 2-ல் தாம்ரமூர்த்தியாகிப் பலம் குன்றிச் சஞ்சரிப்பதால் நன்மை குறையும். எனினும் இவருடன் குருவும் சேர்ந்திருப்பதால் எதையும் வெற்றிகரமாச் சமாளித்து விடலாம். மற்றும் செவ்வாய் - சனி என்பவற்றின் சுப சஞ்சாரம் நன்மையாகும். பொதுவாக இவர்களுக்கு தேகசுகம், குடும்பசுகம் திருப்திதரும். வருமானம் அதிகரிக்கும். வீட்டில் சுபசந்தோஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

குடும்பத்தவர்கட்கு குடும்பசுகம் திருப்தியளிக்கும். கணவன் - மனைவி நல்லுறவு வளரும். வருமானம் அதிகரிப்புடன் செலவும் ஏற்படலாகும். புத்திரரால் உதவியுண்டாகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் முன்னேற்றம் தொடரும். முதலீடுகளுக்கேற்ற காலம். வங்கி - நிதி வசதிகள் அதிகரிக்கும். வாடிக்கையாளரின் வருகை வளரும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் நெருக்கடிகள் கூடும்: ஆனால் எதையும் வெற்றிகரமாக சமாளிக்கலாம். சக உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் உதவியும் ஆறுதளிக்கும்.

விவசாயிகளுக்கு பயிர்வளர்ச்சியும் விளைவும் அதிகரிக்கும். மானியம் - பசளை வசதிகளும் கிட்டும். பண்ணை விவசாயம் முன்னேற்றம் பெறும். சந்தை வாய்ப்பும் கிட்டும்.

தொழிலாளர் ஒற்றுமை திருப்தியளிக்கும். வேலை வாய்ப்புக்களும், வருமானமும் கூடும். தினச்சம்பள வேலையாட்களுக்கும் போதிய வருமானம் கிட்டும்.

மாணவர்கல்வி வளர்ச்சியுறும். ஆசிரியர் - மாணவர் நல்லுறவு வளரும். உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்விபயில்வோர் சிறப்பான முன்னேற்றம் பெறுவர்.

பெண்களுக்கு மனநிறைவான காலம்: குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் அன்பும் அரவணைப்பும் மனநினைப்புக்களை நல்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் இடம்பெறும்.

அதிஷ்ட நாட்கள்: பெப் 13,17,18,26 பகல், 27
மார் 2 பகல், 3.7, 8பகல் 11, 12
துரதிஷ்ட நாட்கள்: பெப் 19 பகல் 20, 21 மு.ப. 24
மார் 4 பி.ப. 5, 6 பகல்



## கும்பம்

**அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்**

கும்பராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரிய பகவான் ஜென்மத்தில் ரஜஸ மூர்த்தியாகிச் சஞ்சாரம் செய்வது நன்மை, தீமைகள் கலந்து நிகழும். இவருடன் குருவும் ஜென்மத்தில் சஞ்சரிப்பதும் கவனிக்கப்படவேண்டும். பொதுவாக இவர்களுக்கு உடல்நலக்குறைவும், மனநலக் குறைவும் அடிக்கடி இடம்பெறும். பொருள் நட்டம் பகைவிரோதங்களும் தொடரும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும். வாக்குவிரோத சம்பவங்கள் அடிக்கடி இவர்களுக்கு தொல்லை கொடுக்கும். அடிக்கடி திடீர் நெருக்கடிக்குள்ளாகி அவஸ்தைப் படவும் நேரும். இஷ்டதெய்வத்தை பக்திசிரத்தையாக வழிபடுவதலாலேயே இவர்கள் சாந்தியடையலாம்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் எதிர்பாராத சிக்கல்கள் நெருக்கடிகள் அவ்வப்போது தோன்றி மறையும். குடும்ப வருமானம் குன்றும். கணவன், மனைவி உறவு பாதிப்புறும். புத்திரர் தொல்லை அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் படிப்படியாக பாதிப்புறும். வங்கி-நிதிவசதிகளும் குறையத் தொடங்கும். புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. கறுப்பு மார்க்கட் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதே பெரிய பாரமாகிவிடும். சக உத்தியோகத்தர்களில் அவநம்பிக்கை கொள்ளவும் நேரலாம்; சிலருக்கு பதவி இறக்கம்கூட நிகழலாம்.

விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி திருப்தி தரும். கூலியாட்களும் உதவி தருவர். ஆனால் பசளை மானியம் முதலியனவும் மருந்துவகைக ளும் சமயத்தில் கிடையாமல் பயிர் பாதுகாப்பும் குறைவுற நேரிடும்.

தொழிலாளர் வேலைவாய்ப்புகள் பெற்றாலும் தொழில் பிணக்குகளும் இருக்கவே செய்யும். சில இயந்திரத் தொழில் நுட்பத் தொழிலாளருக்கு விபத்துக்கள் கூட ஏற்பட இடமுண்டு. தொழில் ஒப்பந்த வேலைகளும் சம்பலிதம் தரும்.

மாணவர் கல்வியில் தடைதாமதங்கள் தொடரும். மாணவர் கல்வி ஊக்கமும் குறையத் தொடங்கும். கல்வித் தேர்ச்சியும் குன்றும். சுயமுயற்சி இவர்களுக்கு உதவும்.

பெண்களுக்கு பலப்பல பிரச்சினைகள் ஏற்படும். கன்னிப் பெண்களின் கல்யாண விவகாரங்கள் தடைப்படும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் கெடுபிடிகள் அதிக தொல்லை தரும்.

அதிஷ்டநாட்கள். பெப். 14பகல், 15,16பகல் 20. மார்ச். 1,2காலை, 5,6பகல்,

துரதிஷ்டநாட்கள்: பெப். 21பி.ப 22,23,26பக27. மார்ச். 6இரவு,7,8பகல்.



## மீனம்

பூரட்டாதி 4-ம்கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியில் ஜெனனமானவர்களுக்கு இந்த மாதம் 12ல் சுவர்ணமூர்த்தியாகி வலம்வருகின்றார். ஸ்தானபலம் குறைந்தாலும் மூர்த்திபலம் பெறுவது நன்மையாகும். பொதுவாக இவர்களின் உடல்நலம் சீராகவே இருக்கும். பொருள்வருமானமும் அதிகரிக்கும். ஆனால் செலவுகளும் அதிகரித்துக்கொண்டே போகும். செலவுகளுடன் தடைதாமதங்களின் மேல் எடுத்தமுயற்சிகள் கைகூடிவரும். சிலருக்கு புண்ணிய தீர்த்த யாத்திரைப் பலன்களும் கிடைக்கும். வாகனம் சம்பந்தமான விபத்துக்களும் சிலருக்கு ஏற்பட இடமுண்டு.

குடும்பத்தவர்களுக்கு குடும்பாதிபன் சனி சேர்க்கை பெறுவதும் காரகன் சூரியன் சம்பந்தப்படுதலும் குடும்பத்தில் சிக்கல்கள் பிணிபீடைகளுக்கு ஏதுவாகின்றன. அநாவசியச் செலவுகளும் அடிக்கடி இடம்பெறும்.

வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றம் சிறிதுசிறிதாகக் குறைவடையத் தொடங்கும். வாடிக்கையாளர் வரவும் குறைவுறும். புது முதலீடுகள் தவிர்த்தல் நல்லது.

உத்தியோகத்தர்கட்கு அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். ஆனால் வேலைப்பொறுப்புக்களும் கூடிக்கொண்டே போகும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பும் குறைவுறும். வருமானத்திலும் செலவுகள் அதிகரிக்கும்.

விவசாயிகட்கு உற்பத்திச்செலவு அதிகரிப்பதுடன் பயிர்ச்செழிப்பும் விளைவும் குறைவுறும். பண்ணை விவசாயிகளுக்கு பெரிதும் பாதிப்புக்கள் ஏற்படும். விளைவுகளுக்கு லாபகரமான சந்தை வாய்ப்பும் கிடையாது.

தொழிலாளருக்கு வேலைவசதிகள் ஓரளவு கிடைக்கும். ஆனால் ஊதியம் பற்றாக்குறைவையே கொடுக்கும். கருவிகள் இயக்கும் தொழிலாளர்கள்விபத்துக்களையும் சமாளிக்கவேண்டியேற்படும்.

மாணவர் முயற்சிகளுக்கு ஏற்றபடி கல்வியில் முன்னேற்றம்பெறுவர். ஆசிரியர் மாணவர் மத்தியில் கருத்துவேறுபாடுகள் அவ்வப்போது தோன்றிமறையும். பரீட்சைத் தேர்வுகள் சுமாரான திருப்திதரும்.

பெண்களுக்கு கடந்தகாலங்களில் பெற்ற காரியசித்திகள் படிப்படியாகக் குறையத்தொடங்கும். கன்னிப் பெண்களின் விவாகமுயற்சிகள் தடைப்படும். குடும்பப்பெண்களுக்கு குடும்பபிணி பீடைகளுடன் கூடிய குடும்பபாரம் உடல் உளப் பாதிப்புக்களையும் ஏற்படச்செய்யும்.

அதிஷ்ட நாட்கள்: பெப் 13,17,18,21,22,23, மார்ச் 3,4,6,7,11,12.

துரதிஷ்ட நாட்கள்: பெப் 24,25,28. மார்ச் 1,2,8,9,10.

# தமிழ் எழுத்துக்களும் எண்களும்

சோதிடர் மு. மு. மார்க்கண்டு

சோதிடம்- கைரேகை சாஸ்திரம் முதலியவற்றைப்போன்றதே எண்சோதிட சாஸ்திரமும். ஆருடம் தொடுகுறி சாஸ்திரம் போன்றவற்றின் அடிப்படைத் தத்துவமும் எண்சோதிடத்தின் தத்துவமும் ஒன்றேதான்.

கிரகங்களைக்கொண்டு கூறும் பலன்களும்- கைரேகைகளைக் கொண்டு கூறும்பலன்களும் எண்கள் மூலமாகவும் அறியமுடியும் கூற முடியும். கிரகசோதிடமும் ரேகைசாஸ்திரமும் போன்றவற்றைப்போல எண்சோதிடமும் மிகப்பழமை வாய்ந்ததாகும். இந்தியாவிலும் - எகிப்து - பபிலோனியாவிலும் ஐரோப்பாவின் பல பாகங்களிலும் பரவியிருக்கிறது. யூதர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. அவர்கள் கூறிய பலனும் நூற்றிற்கு நூறு உண்மையாகி வந்தன. ஆனால் சோதிடம் - ரேகை சாஸ்திரம் போன்று பிரபல்யமாகாமல் ஒருகுறிப்பிட்ட மக்களிடையே இருந்து வந்தன. வெகுகாலத்திற்கு பிறகு புத்துயிர்பெற்று இப்போது உலகெங்கும் பரவி செல்வாக்குப் பெற்றுவருகிறது.

திருவள்ளுவர்-ஔவையார் ஆகிய பேரறிஞர்கள் இருவரும் எண்-எழுத்து இரண்டிற்கும் கண்களை உவமை கூறினர்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. — திருவள்ளுவர்

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும். — ஔவையார்

எண்ணில்லாதவர் கண்ணில்லாதவர்; எழுத்தில்லாதவர் கழுத்தில்லாதவர். உலகமே எண்ணினாலே இயங்குகிறது. சூரியசந்திரர்களும், கிரகங்களும் பகல் இரவு முதலியகாலங்களும் குறிப்பிட்டபடி அணுவும் பிசகாமல் இயங்குவது கணக்கிடும் எண்ணில் அடங்கியவை என்பது தெட்டத்தெளிவாகும். கிரகங்கள் தமது சக்தியை எண்ணின் மூலம் வெளிப்படுத்துவது என்பதை ஆராய்ச்சியாலும், பகுத்தறிவாலும் கண்டு கொளளலாம்.

எண்சோதிடக்கலை சீனாவைச் சேர்ந்ததென்றும் எகிப்தைச் சேர்ந்தது என்றும் கிரேக்க நாட்டைச் சேர்ந்தது என்றும் பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். ஆனால் இக்கலை இந்தியநாட்டுக்கலை என்பதற்கு பல ஆதாரம் காட்டப்பட்டிருக்கிறது. எப்படியாயினும் எண்களின் சக்தி நமது புராதன ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டு ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் யார்யார் அதிபதி என்பதையும் அவைகளுக்கு மதிப்பெண்ணையும் கொடுத்திருக்கிறார்கள். எண்கள் வகுக்கும் பாதை மிகவும் அதிசயமானது.

பிறந்த திகதி யந்திரம், பெயர் மந்திரம், பிறந்த திகதி யந்திரத்திற்கு அமைய பெயர் மந்திரம் அமைய வேண்டும்.

பிறந்த திகதியைக் கொண்டும் பெயரைக் கொண்டும் ஒருவரின் வாழ்க்கையை அவரின் சிக்கலை அறிய முடியும். கிரக சாந்தி செய்து கடவுளை வழிபட்டு சாந்தியடைவது போல் பெயர் மாற்றத்தினாலும் சாந்தி நிம்மதியடைய முடியும் என்பது சரியான முடிவு. எண்களைச் சரியாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் இந்த உண்மை தெரியும்.

### பெயர் மாற்றம்

ஆங்கில எழுத்துக்களுக்கு இலக்கம் அமைவது போல் தமிழ் எழுத்துக்களுக்கும் இலக்கம் உண்டு.

ஆங்கில எழுத்துக்கு புராதன சால்டியன் முறைப்படி

| | | | |
|---|---|---|---|
| A. I J. Q. Y. | — 1 | B. K. R. | — 2 |
| C. G. L. S. | — 3 | D. M. T. | — 4 |
| E. H. N. X. | — 5 | U. V. W. | — 6 |
| O. Z. | — 7 | F. P. | — 8 |

9 எண்ணுக்கு எழுத்தில்லை.

பைதகோரஸ் முறைப்படி

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G | H | I |
| J | K | L | M | N | O | P | Q | R |
| S | T | U | V | W | X | Y | Z | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

9 எண்ணுக்கும் எழுத்து கொடுத்திருக்கிறார்கள்.

இன்னொருமுறையாக அராபியர்கள் எழுத்திற்கு எண்கள் கொடுத்திருக்கிறார்கள். அனுபவப்படி அதிகமானோர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதும் சரியாகச் செயல்படுவதும் சால்டியன் முறையாகும்.

இதே போன்று தமிழில் கையெழுத்திடுபவர் களுக்கும் தமிழ் எழுத்துக்களுக்கு இலக்கம் உண்டு. பலர் நூல்கள் வெளியிட்டிருக்கிறார்கள். தமிழ் வாணன் வாசுதேவன், விகிரு இராமநாதன் முக்கிய மானவர்களாகும். ஒவ்வொருவரும் சிறு மாற்றமாக கொடுத்திருக்கிறார்கள், அனுபவத்திற்கு ஒத்துவரக்கூடியதாக இல்லை.

அர்த்தமுள்ள இந்து மதம் 1-ம் பாகத்தில் கவிஞர் கண்ணதாஸன் ஒரு கிறீஸ்தவர் தன் பலன் அறிவதற்கு காண்டம் வாசித்தபோது 'ச' வில் ஆறும் 'சா' வில் ஒன்பதும் என்று எழுதப்பட்டிருந்ததாகவும் அவர் பெயர் சூசை என்றும் எழுதியிருந்தார். இதே மாதிரி கும்பாபிஷேக மலரிலும் இக்கூற்று இருந்ததை அறிந்தேன்.

உயிர் இன்றி மெய் இல்லை. அதாவது உடம்பில்லை. இதே போன்று உயிர் எழுத்தின்றி மெய் எழுத்தில்லை. மெய் எழுத்து உயிர்எழுத்தால் இயங்குகிறது எனலாம். இதன்படி தமிழ் எழுத்திற்கு எண்கள் கொடுத்து பெயர் மாற்றம் செய்து வாழலாம்.

## தமிழ் எழுத்துக்களின் எண்கள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 |

| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 |

| வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|
| 5 | 6 | 7 | 8 | 9 |

| க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| கொ | கோ | கௌ |
|---|---|---|
| 1 | 2 | 3 |

இப்படியே ங ச ஞ ட ண த ந ப ம ய
ர ல வ ழ ள ற ன

என்ற எழுத்துக்களுக்கும் 'க' என்ற எழுத்துக்கு கொடுத்திருக்கும் வரிசைப்படி எண்களைக் கொடுக்கவும்.

இப்படி தமிழ் எழுத்துக்கு எண்களை கொடுத்து பல அதிசயங்களை அறியமுடியும்.

| | |
|---|---|
| சிவம் | சக்தி |
| 311 — 5 | 113 — 3 |
| முருகன் | தெய்வானை |
| 551 9 — 20 | 7229 — 20 |
| விக்கினேஸ்வரன் | வள்ளி |
| 3138 3119 — 29 | 173 — 11 - 2 |
| தந்தை | தாய் |
| 189 — 9 | 22 — 4 |
| நாய் | மாதா |
| 22 — 4 | 22 — 4 |
| காதல் | சாதல் |
| 214 — 7 | 214 — 7 |
| விவாகம் | கலியாணம் |
| 3211 — 7 | 13211 — 8 |
| சசி | மதி |
| 13 — 4 | 13 — 4 |
| சந்திரன் | சூரியன் |
| 18319 — 22 - 4 | 6319 — 19 - 1 |
| இந்தியா | இந்திரா |
| 3832 — 16 - 7 | 3832 — 16 - 7 |
| காந்தி | நேரு |
| 283 — 13 - 4 | 85 — 13 - 4 |
| சுபாஸ் | ரஜீவ் |
| 523 — 10 - 1 | 145 — 10 - 1 |
| சுபாஸ்சந்திரபோஸ் | |
| 5231831 23 — 28 - 1 | |

# அஞ்சலி

**சோதிடர் திரு. மு. மு. மார்க்கண்டு அவர்கள்**

யாழ் பெரியகடை விஜய சோதிட நிலைய அதிபரும் இலங்கைச் சோதிட ஆய்வுமன்றத்தின் கௌரவ பொருளாளராக இருந்தவருமாகிய சோதிடர் திரு. மு. மு. மார்க்கண்டு அவர்கள் கடந்த மாதம் 16-ந் திகதி காலமானார் எனும் செய்தி கேட்டு மிகவும் அனுதாபமும் வருத்தமும் அடைகிறோம். இவர் நட்சத்திரரீதியில் எண்கள் எனும் எண்சோதிடக் கட்டுரை மூலம் சோதிட மலரில் அறிமுகமாகி, ஆய்வுமன்றத்தில் ஆக்கபூர்வமான சிறந்த கருத்துக்களை துணிவுடன் எடுத்தியம்பி ஆய்வுமன்றத்திலும், சோதிட உலகிலும் தனிஇடத்தைப் பெற்றவராவார். தமிழ் எழுத்துக்களுக்கு எண்கள் எனும் கட்டுரை எழுதி எமக்கு அனுப்பிய சமயம் இவ்வுலகிலிருந்து மறைந்துவிட்டார். அவருக்கு அஞ்சலியாக இக் கட்டுரையை வெளியிடுவதோடு அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஆ-ர்)

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## எண் - 9 செவ்வாய்

(சென்ற இதழ் தொடர்)

### பெயர் எண் அல்லது கூட்டு எண்களினுல் வரும் பலாபலன்கள்

18:- ''முழுமதி சந்திரனிலிருந்து இரத்தம் கதிர்கள் ரூபமாக பூமியைநோக்கி சிதறியபடி இருக்கின்றது. கடும் பசியுள்ள ஒருநாயும் ஓநாயும் வாயைத் திறந்துகொண்டு இரத்தத்தை ஏந்திக் கொண்டிருக்கின்றன. அத்துடன் ஒரு நண்டு, நாயும் ஓநாயுமுள்ள இடத்திற்கு விரைந்துகொண்டிருக்கின்றது'' இதுவே எண் 18ன் சின்னமாகும்.

பழமையுடன் புதுமைகாணும் புரட்சிவீரர்கள்: தர்மம் நீதிக்காகப் போராடுவார்கள். திறமை மிகுந்தவர்கள் அளவுக்கு மீறிய யோசனை பிடிவாதத்தால் பதவி உயரவேண்டிய நேரம் உணர்ச்சிவசப்பட்டு தொழிலிடத்திலிருந்து வெளியேறவும் முற்படுவார்கள். திடீரென ஏற்படும் வீழ்ச்சி தோல்விகளே இவர்களின் வெற்றிக்கு வழிகாட்டும். படிகளாக அமையும். சகோதரர்களுக்காக ஏனையோருடன் போராடுவர். வீட்டுப் பொறுப்பு, உரிமைப் போராட்டம் என்பவற்ருல் சிறந்த அனுபவங்களைப் பெறுவார்கள். பள்ளத்தில் விழுந்ததின் பின்பே நற்குணம் கொண்டு, தெய்வவழிபாடு பெருகி வாழ்க்கையில் முன்னேறுவார்கள். பணம், பதவி, பட்டத்திற்காகப் போராடுவார்கள். தேடியசெல்வத்தை ஒருகணத்தில் சிலர் தட்டிப்பறித்து விடுவார்கள். எதிர்கால நல்வாழ்வுக்கு வழிவகுக்க விரும்பும் அன்பர்களுக்கு இதுஏற்ற எண்எனக் கூறமுடியாது. இந்த எண்ணில் தமதுபெயர் அமைந்துள்ளவர்கள் நிச்சயம் வேறு அதிஷ்ட எண்ணுக்கு பெயரை மாற்றிக் கொள்ளவும்.

27:- இயற்கை பல வசதிகளைச் செய்து கொடுக்கும். சக்தி, புத்தி, யுக்தியை விருத்திசெய்யும். எந்த[illegible]த்தையும் துருவித் துருவி ஆராய்வார்கள். பணம், பதவி, பட்டம், கிடைக்கும். ஓய்வில்லாத உழைப்பால் உயர்வடைவர். எந்த விசயத்தையும் உறுதியாக நிச்சயித்துக் கொள்வார்கள். தனதுகுடும்பம், குழந்தைகளுக்காக எதையும் செய்வார்கள். நண்பர்கள் தன்னிடம் தேடிஓடிவருபவர்களுக்கு பலஉதவிகள் ஆலோசனைகளை வழங்குவார்கள். தொழில்நுட்பம் மின்சாரம், எழுத்து, விவசாயம் கலைத்துறை என்பவற்றில் அதிகநாட்டம் இருக்கும். வருங்காலத்தில் புதிய தொழிலைத் தொடங்கி வேகமாக முன்னேறிவர இந்தஎண் உதவியாக இருக்கும். நீதிநேர்மையாக இயங்கவேண்டும். தர்மத்திற்கு மாருன காரியங்கள் செய்தால் மதிப்பிழப்பார்கள்.

36:- சலன மனேநிலையுடையவர்கள்: இன்று சரியெனச்சொல்வதை நாளை பிழைஎன வாதிடுவார்கள்: வானில் விற்பனை செய்பவர்களாகவோ அல்லது அடிக்கடி தொழிலிடத்தில் மாறுபவர்களாகவோ இருப்பார்கள்: கடல்கடந்து வெளிநாடுகள் சென்று அதிக பொருளீட்டக்கூடிய எண் ஆகும். இவர்கள் ஒன்றில்அறிவு அல்லது தொழிற் சிறப்பு அடைவார்கள். ஆனுல் பொருள் மிக வேகமாக விரையமாகிக் கொண்டிருக்கும். பொருள் அதிகம் இருந்தாலோ தொழிலிடத்தில் பலவீனமானவர்களாக சச்சரவு உடையவர்களாக அடிக்கடி தொழிலை மாற்றிக்கொண்டு இருப்பவர்களாக இருப்பார்கள். நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். ஆனுல் இனஜனங்களால் உதவிகிடைக்காது. எண்ணை இயந்திரம், மின்சார உயகரணம் என்பவை தொடர்பான தொழில்களில் சிறப்படைய இடமுண்டு.

45:- உறுதியான சட்டதிட்டங்களால் முன்னேறுவார்கள். தீவிர உழைப்பாளிகள். தொழிலிடத்தில் எல்லோருக்கும் உதவுவார்கள் அன்பு, பண்பு கொண்டவர்கள். தமக்கென தனியிடம் வகுப்பார்கள். அடிக்கடி மனதில் ஏதாவது ஒரு

விசயம் வந்து வந்து பயமுறுத்திக் கொண்டிருக்கும். தொழில்வளர்ச்சி பெரியவர்களின் உதவி, தெய்வபக்தி பெண்களின் அதாபம், மனைவியின் அன்பு என்பன உடையவர்கள். மனைவிவழியால் பொருள்வந்து கொண்டிருக்கும். சுகவாழ்வு செல்வம், செல்வாக்கு வயதுஏற ஏற பெருகியபடி இருக்கும். பெயரை இவ்வெண்ணில் மாற்றலாம். முயற்சி வெற்றியாகி பிரயாசையால் பெரும் பொருள் தேடுவர்.

54:- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்கள். நாட்டின் சட்டதிட்டங்களை பெரிதாக மதிப்பார்கள். பிறருக்கு உழைத்துக் கொடுப்பது போன்று வாழ்வு அமையும். வைத்திய இரசாயன அனுபவம் மிகுந்திருக்கும். பொதுச்சேவை, தொண்டுகள் செய்து பிறரைக் கரைசேர்த்து முன்னுக்குக் கொண்டுவரும் தியாக சீலர்கள். ஜனவசீகரமான எண்ணுகும்: வெற்றி தோல்வி மாறி மாறி ஏற்படும்.

63:- ஆரம்பவாழ்வு போராட்டமானதாகும். 24 வயதிற்குப்பின்பு படிப்படியாக வாழ்வில் முன்னேறுவார்கள். வெளிநாட்டுத் தொடர்பான எத்தொழிலிலும் இலாபம் அடையலாம். வாக்குச் சாதுரியம் நிறைந்தவர்கள். காதலிக்காதவன் படுமுட்டாள்என்பர். திருமணத்தரகு, தொழில் நுட்பம் பொறியியல்தொடர்பு என்பன அமையும். சுயமுயற்சியே சிறப்பைத்தரும். காணி பூமி சேரும். வாழ்வின் பிற்பகுதியில் சிறப்புடன் வாழ்வார்கள். நற்புத்திரர்கள் உதவியாக இருப்பார்கள். இவர்கள் விட்டுப்போன தொழிலை மீண்டும் தொடருவார்கள். கெட்டவர்களினால் திசை மாறிக் கெட்டுப்போகவும் சந்தர்ப்பமுண்டு.

72:- வறுமையின் கொடுமை இவர்களுக்கு இளமையில் தெரியும். நடுவயதில் பொருள்பெற்று, தனித்தொழில் சுயதொழில் செய்வர். அதிகார இடங்களில் தொழில்செய்து அதிகபொருளை ஈட்டிக்கொள்வார்கள். சிற்றின்பப் பிரியர்கள். பல பெண்களிடம் தொடர்பிருக்கக்கூடும். இவர்கள் பலரும் அறிந்த அறிஞர்களாக இருக்க இடமுண்டு. சிறப்பாக 45ம் எண்ணைப்போன்று நன்மைகளை இந்தஎண் நிட்சயம் செய்யும்.

81:- அரசியல்வாதிகள், சட்டவாதிகள், கலைக்குவங்கித் தொடர்பானவர்களாக இருப்பர். சட்டவிரோதமாகவும் பொருளைத் தேடுவார்கள். குடும்பசுகக்குறைவு, இவர்களுக்கு இனசனங்களைத் தவிர ஏனையோர்கள் உதவிகளைச் செய்வார்கள். எவிலா இன மக்களதும் ஆதரவு அனுதாபம் இருக்கும். மேடைப்பேச்சாளிகள். இயல் இசை நாடகம் தொடர்பு இருக்கும். மனைவிமக்களால் சிறப்பு ஏற்படும் அதிக சொத்துக்களைப் படிப்படியாகச் சேர்த்துக் கொள்வார்கள்.

90:- ஆரம்பத்திலிருந்து மிகவேகமாக முன்னேறிவருவார்கள். கைத்தொழில், வியாபாரம் பரம்பரைத்தொழில், மின்சார, இரசாயனத் தொடர்பு சிறப்பைத்தரும். இவரின் குடும்பத்தில் திடீர் கை கால்முறிவு, ஆபிரேஷன்கள் வாத நோய்கள் இருக்கும். குடும்பவாழ்வு பிரச்சனைகள் இருந்தாலும் பொருளாதாரத்தால் சமாளித்து விடுவார்கள். ஒளிமயமான எதிர்காலம் இவர்களை இருகரம் நீட்டி அழைத்தபடி இருக்கும்.

99:- தந்திரமான எண் ஆகும், வேகம்கூடியவர்கள், எப்படியாவது பொருளைச்சேர்த்திடுவோமென எண்ணி எக்காரியத்தையும் துணிவுடன் செய்வார்கள். அரசியல் பொதுத்தொண்டு எனச் சொல்லிச் சொல்லி அதிகபணத்தை வீட்டில் சேர்த்துவிடுவார்கள். மங்கைக்கும், மதுவுக்கும் பதவிக்கும் பொருளை அள்ளிவீசுவார்கள். அரசியல் அல்லது வேறுஏதாவது ஒருதுறையில் உச்சப்படிகளில் ஏறி தலைகீழாக விழுவர். போற்றுபவர்கள் தூற்றுவார்கள். இறுதிக்காலம் நடைபாதைக்கும் வந்துவிடக்கூடும். ஆனல் மனைவிமக்கள் இவர்களைக் காப்பார்கள்.

108:- பூமியில்விளையும் பொருட்களைக் கொண்டு அதிகபணம் சம்பாதிக்கலாம். விவசாயம் செய்யலாம். ஏற்றிஇறக்குதல், கடல்கடந்த வியாபாரம் சிறப்பைத்தரும். நீர்- நெருப்பு சம்பந்தப்பட்ட தொழில் அமையவேண்டும். உற்பத்தி, விளைவு அடிப்படையாகவுள்ள தொழிலமைப்பு அதிகசெல்வத்தைத் தரும். மிகவும் பொறுமைசாலியாக இருப்பார்கள். இவர்கள் இருக்குமிடத்தில் செல்வம் வந்துசேரும். நண்பர்கள் உறவினர்களின் ஆதரவு, உதவிஎப்போதும் இருக்கும். தெய்வீகஅருளும் மந்திரசக்தியும் பூரணப்படும் ஒருசிறு அலகாகவும் இந்தஎண் இருக்கின்றது. காரியசித்தி ஏற்படும். அரசாங்கத்தில் உள்ளபீடங்களில் பதவி வகுப்பார்கள்.

தொழிலிடத்தின் பெயர் அல்லது தொழிலிடத்தில் இலக்கத்தை 27,36,45,54,72 81,90,108 அமைத்தால் வாழ்வில் சிறப்பானபலன்களை அனுபவிப்பார்கள்.

(தொடரும்)

# உத்தியோகத்திலிருந்து நீக்கப்படுவேனு?

‘பவானி’ — பருத்தித்துறை

சென்ற மேமாதம் அனுராதபுரத்தில் நடந்த வன் செயல் காரணமாக இச்சாதகர்கள் அங்கு கடமையாற்றப் போகவில்லை. இவர்களைப்போல் இன்னும் சிலர் உளர். இதேவேளையில் இவர்களுக்கு இவர்களின் தலைமைக்காரியாலயத்திலிருந்து வேலை நீக்க அறிவிப்பும் வந்தது. அவ்வறிவிப்பின்படி இவர்கள் 1-7-85 தொடக்கம் வேலைக்கு வராதபடியால் வேலையைவிட்டு நீங்கிவிட்டதாகக் கொள்வதாகவும், அத்துடன் மீண்டும் வேலைக்குச் சேரும் உரிமையையும் இளைப்பாறிய ஊதியத்தை இழந்துவிட்டதாகவும் அறிவித்திருந்தார்கள்.

இதனுல் இவ்விருவரும் மனம் குழம்பியநிலையில் தங்களது ஜனனசாதகங்களுடன் என்னிடம் வந்திருந்தார்கள்.

சாதகங்கள் திருக்கணிதமுறையில் - அதுவும் கிருஷ்ணபத்ததி முறையில் - சுத்திகரித்து கணிக்கப்பட்டிருந்ததனுல் என்வேலையும் சுலபமாகியது.

பொதுவாக வாக்கியமுறையில் கணித்தசாதகங்களை நான் ஆராய்வதில்லை; அவையாவும் தப்புத்தாளங்கள். அவர்களுக்கு பாவமுனைகள் கிடையாது. இருந்தாலும் அவையாவும் தவருனவை என்று அறுதியாகவும் உறுதியாகவும் கூறலாம். சரியான ஜனன நேரத்தைக்கண்டுபிடிக்கமுடியாத போது சாதகம் எப்படி இருக்கும்? பலன்களும் எப்படி அமையும் என்பது யாவரும் அறிந்தே. இதேகருத்தைத் தான் திரு. வி. க. தனது சுயசரிதையில் கூறுகின்ருர்; அதையும் சிறிது சுவைத்துப் பாருங்கள்.

என் ஜாதகக் குறிப்பு முதன்முதல் திருவல்லிக் கேணியில் என் பாட்டியார் வீட்டில் ஒருவரால் கணிக்கப்பட்டது. பின்னே அது நாம்பல் இரத்தினவேல் நாயனுரால் விரிவாக எழுதப்பட்டது. ரீ. பார்த்தசாரதி நாயகரை அழைத்துவந்து சாதகத்தை ஸ்புடம் செய்யாமல் பலன்கூற மறுத்துவிட்டார். பின்பு பார்த்தசாரதி நாயகரால் ஜாதகம் கணிக்கப் பெற்றது.

என் ஜாதகத்தில் இராசிசக்கரம் பெரும் பாடுபட்டவில்லை. ஒருவர் கணித்ததில் இலக்கினம் மாறியது; இடபம் மிதுனமாயிற்று. (இவரின் உதயலக்கினம்- 4°28′ இடபம் ஆகும்) மற்ெருருவர் ஆராய்ச்சியில் சந்திரன் மிதுனத்திற்கு ஓடினுன். அம்சா சக்கரம் பட்ட பாட்டை என்னென்று சொல்வேன். கடலங்குடி நடேச சாஸ்திரியார், வடகுரங்காடுதுறை சாமிநாததேசிகர் சூளூர் அப்பாஜிசோதிடர், எட்டையபுரம் குரு. குகதாசபிள்ளை, ஆர்க்காடு இராமசாமிச் செட்டியார் முதலியோர் கணிப்பில் அம்சா சக்கரம் பல வழியில் திரிபுண்டது. லக்கின மாற்றமும் கோள் மாற்றமும் மலியலாயின. இப்படியாக வாக்கிய சோதிடர்களை நொந்துகொள்கின்ருர் திரு. வி. க.

இதனுல் திருக்கணித சோதிடர்கள் துள்ளித்திரிவதையோ அல்லது வாக்கிய சோதிடர்கள் துவண்டு போவதையோ நான் விரும்புவதில்லை. சிலரின் அறியாமையால் பல அனர்த்தங்கள் ஏற்படுவது இயல்பாகும். தவறுவது மனித இயற்கை அதை மன்னிப்பது மறப்பது உயர்ந்த பண்பு ஆகும்.

இச்சாதகர்கள் பலரிடம் சென்று, திருப்திப்படாமல் இறுதியில் என்னிடம் வந்திருந்தார்கள். அவர்களின் சாதகங்களை ஆராய்வோம்.

| | | | |
|---|---|---|---|
| IX 10 27<br>சனி 5 32 | X 12 34<br>யுரே 17 27 | XI 13 25<br>கே 12 28 | XII 12 36 |
| சந் 20 32<br>VIII 9 32 | 10-12-1937<br>நேரம்:<br>இரவு 9-05-44 செக்<br>பொ. நேரம்.<br>பருத்தித்துறை<br>அயனும்சம்: 22 53 | | I 11 22 |
| செவ் 28 44<br>VII 11 22<br>குரு 5 06 | | | II 9 32<br>நெப் 28 13 |
| புத 15 42<br>VI 12 36 | சுக் 12 01<br>ராகு 12 29<br>V 13 25<br>சூரி 25 19 | IV 12 34 | III 10 27 |

ஜனனத்தின்போது நின்ற தசை:-
குரு தசை: 15வ-4-மாத-10நாள்.

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | உபநட்சத்திராதிபதி |
|---|---|---|
| சூரியன் | புதன் | இராகு |
| சந்திரன் | குரு | குரு |
| செவ்வாய் | செவ்வாய் | சனி |
| புதன் | சுக்கிரன் | சூரியன் |
| வியாழன் | சூரியன் | சனி |
| வெள்ளி | சனி | சந்திரன் |
| சனி | சனி | புதன் |
| இராகு | சனி | செவ்வாய் |
| கேது | சந்திரன் | இராகு. |

இலக்கினமுனை:- சனிசாரம் சந்திரன் உபநட்சத்திரத்தில் அமைகின்றது.

12ம் பாவமுனை:- இராகுசாரம் புதன் உப நட்சத்திரத்தில் அமைகின்றது.

10ம் பாவமுனை:- கேதுசாரம் புதன் உப நட்சத்திரத்தில் அமைகின்றது.

9ம் பாவமுனை:- சனிசாரம் சூரியன் உப நட்சத்திரத்தில் அமைகின்றது.

இச்சாதகருக்கு புதன் தசையில் குருபுத்தி 5-5-1984 தொடக்கம் 11-8-1986 வரையும் நடைபெறும். இப்பிரச்சனையை ஆராய்வதற்கு இலக்கின முனை 12ம், 10ம், 9ம், பாவமுனைகளையும் ஆராய்தல் வேண்டும்.

இலக்கினம் சாதகரைக் குறிக்கும். 12ம் வீடு விரயம், இழப்பு, தியாகம் முதலியவைகளைக் குறிக்கும். 10ம் வீடு, தொழில், காமம், சம்பாத்தியம், முதலியவைகளைக் குறிக்கும். 9ம்வீடு; பாக்கியம், தூரப்பிரயாணம், நீண்ட விடுமுறையில் செல்லுதல், கந்தோருக்குச் செல்லாதிருத்தல், தொழிலை இழத்தல் முதலியவைகளைக் குறிக்கும்.

உத்தியோகத்தில், ஒழுங்கு நடவடிக்கைகளில் ஒருவரை தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கலாம்; அல்லது குற்றப்பத்திரிகை கொடுக்கலாம்; அல்லது வேலையிலிருந்து நீக்கலாம்.

10ம் வீட்டுமுனையின் உபநட்சத்திராதிபதி 12ம் வீட்டின் குறிகாட்டியாக அமைந்தால் குற்றப் பத்திரிகை கொடுக்கப்படும்.

9ம் வீட்டுமுனையின் உபநட்சத்திராதிபதி 12ம் வீட்டின் குறிகாட்டியாக அமைந்தால் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்படுவார்.

இவ்விதியின் படிதான் இச்சாதகருக்கு வேலை நீக்க அறிவித்தல் நவம்பரில் கொடுக்கப்பட்டது.

9ம் வீட்டு முனையின் உபநட்சத்திராதிபதி சூரியன் ஆகும். இவன் புதன் சாரம் இராகுஉப நட்சத்திரத்தில் நிற்பதால் சூரியன் 12ம் வீட்டின் குறிகாட்டியாகின்றான்.

12ம் வீட்டுமுனை இராகுசாரம் புதன் உப நட்சத்திரத்தில் நிற்பதால் இம்முனையில் சூரியன் தன் வலிமையான ஆதிக்கத்தை செலுத்துகிறார்;

9ம் வீட்டதிபதி குரு: இவன் சூரியசாரம் சனிஉபநட்சத்திரத்தில் நிற்பதால் குருவும்வலிமையான ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன.

12ம் வீட்டதிபதி புதன், சூரியன் மட்டுமே புதன் சாரத்தில் நிற்கின்றான். இதனால் சூரியனும் புதனும் 12ம் வீட்டின் வலிமையான குறிகாட்டிகளாகும். இதனால் 9ம், 12ம் வீடுகளின் வலிமையான குறிகாட்டிகளின் காலங்களில் தற்காலிக வேலைநீக்க அறிவிப்பு கிடைத்தது. இது புதன் தசை குருபுத்தி சூரிய அந்தரம் (2-11-85 தொடக்கம் 13-12-85 வரை நடைபெறும்) ஆகும்

அடுத்து இச்சாதகர் உத்தியோகத்திலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவாரா? இதுதான் அவருடைய கேள்வி.

9ம் வீட்டின் உபநட்சத்திராதிபதியும் இலக்கினமுனையின் உபநட்சத்திராதிபதியும் 12ம் வீட்டின் குறிகாட்டியாக அமையும்போது சாதகர் வேலையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்.

முன்பு9ம்வீட்டுமுனையின் உபநட்சத்திராதிபதி 12ம் வீட்டின் குறிகாட்டியாக அமைவதை அறிந்து கொண்டோம்.

இலக்கினமுனையின் உபநட்சத்திராதிபதி சந்திரன். இவன் குருசாரம் குரு உபநட்சத்திரத்தில் நிற்பதால் சந்திரனுக்கும் 12ம் வீட்டிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதனால் இச்சாதகர் நிரந்தரமாக வேலைநீக்கம் செய்யப்படமாட்டார். இதுஎனது உறுதியான தீர்ப்பு.

சனிசாரம் சந்திரன் உபநட்சத்திரத்தில் இலக்கினமுனையும், சுக்கிரனும் நிற்கிறார்கள். இதனால் இலக்கினமுனை 11ம் வீட்டுடன் சம்பந்தப்படுகிறான். 11ம் வீட்டதிபதி சுக்கிரன், இவன் இராகுவுடன் கட்டித்தழுவிய நிலையில் நிற்பதுடன் 11ம் வீட்டுமுனையின் உபநட்சத்திராதிபதியாகவும் அமைகின்றான், அதேவேளையில் 10ம் வீட்டின் பிரதிநிதியாயும் அமைகின்றான், எனவே இராகு அந்தரத்தில் நீங்கள் மீண்டும் வேலைக்குப் போவீர்கள் என்றேன்.

இச்சாதகர் மகிழ்ச்சியில் பூரித்துப்போனார்.

(வளரும்)

# ஆய்வுமன்றம்

கந்தசாமி தம்பிராஜ், அக்கரைப்பத்தனை.

விண்ணப்பப் படிவத்தில் கிரகநிலை முதலியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பினால் மட்டுமே ஆய்வுமன்றம் பதில் தரும்.

பொன். இராமலிங்கம், கரடியனாறு.

சனி அட்டமாதிபனானாலும் நடப்புச் சனி தசையில் உங்களுக்கு தீர்க்க ஆயுள் பலனுண்டு. பயப்படத்தேவையில்லை.

ந. மகிழ்ராஜ், மாலியவத்தை, சங்கானை.

உமது பிறந்த நேரம் குறித்த தினத்தில் சரியாக இரவு 8 மணி 10 நிமிஷமாக இருக்குமாயின் உமது ஜன்ம நட்சத்திரம் சித்திரை 2-ம் பாதம். சந்திரராசி கன்னி. இலக்கினம் - மகரம் இலக்கினத்தில் ராகு. 4-ல் குரு. 6-ல் சூரியனும் சுக்கிரனும், 7-ல் புதனும் கேதுவும், 9-ல் சந்திரனும் சனியும். 10-ல் செவ்வாய் எனக் கிரகநிலை அமையும். எனவே உமது சாதகம் திருக்கணிதப்படி சரிவரக் கணித்தே பலன்கூறவேண்டும்.

தவராஜா ஜனனி - செட்டித்தெரு.

சாதகக்கணிப்புச் சரியாக அமைந்தால்தான் பலனும் சரிவர அமையும். குறித்த திகதி நேரம் சரியாக இருக்குமாயின் அந்த நேரத்துக்கு இலக்கினம் துலாம். இலக்கினத்தில் சனியும் கேதுவும் மகரத்தில் சந்திரனும் குருவும், மேடத்தில் சுக்கிரனும் கேதுவும், இடபத்தில் சூரியனும் புதனும் மிதுனத்தில் செவ்வாயுமாகக் கிரகநிலை அமையும். தடுமாற்றம் வேண்டாம்.

எஸ். துரைச்சாமி ஐயர், கைதடி.

களத்திரதோஷம், களத்திரரோகம் முதலான பல தோஷமுடைய சாதகம். மறுமணம் செய்வதிலும் முன்னைய தாரத்தைச் சமாதானப்படுத்த முயல்வது நல்லது. இறைவன் பக்தியும் துணையும் தான் ஆறுதல் தரவேண்டும்!

அருமைத்துரை, காங்கேசன்துறை.

இலக்கினாதிபன் உச்சராசியில் இருப்பினும் சூரியன் இரா.. சேர்க்கை பெறுவதும், வாக்கில் செவ்வாய் ஆட்சிபெறுவதும், லாபத்தில் கேது இருப்பதும் நீர் மற்றவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியது தவிர்க்கமுடியாததே! வீணாக மனைவி மக்களை நோகவேண்டாம்.

எஸ். பசுபதி சுன்னாகம்.

தற்சமயம் சனிமகாதசை சனிபுத்தி நிகழுகின்றது. சனி பாதகாதிபனாய் விரயத்தில் பரிவர்த்தன தைந்நிய யோகம் பெற்று இருந்தவராதலின் இவர் புத்திக்காலம் எதிலும் எதிர்பாராத தடைதாமதங்கள் அதிகம் இடம்பெறும்.

இ. இளங்குமரன், கண்டிவீதி, கிளிநொச்சி.

காலதேவன் வேலையில் நீர் ஏன் தலையிட வேண்டும்? கவலையை விடவும்

வே. பாலசுப்பிரமணியம், கற்குளி, சாவகச்சேரி.

காலசர்ப்பயோக சாதகம். ஏதாவதொரு துறையில் மனச்சஞ்சலம் ஏற்பட்டுக்கொண்டே இருப்பது இதன் பலனாகும். சுப்பிரமணியப் பெருமானைப் பக்திசிரத்தையுடன் வழிபட்டுவருவதால் எல்லாத்துன்பமும் நீங்குவது திண்ணம்.

தி. வ. ஐ. மணி, பருத்தித்துறை.

சுத்தக்கணிப்பின்படி உமது ஜன்ம நட்சத்திரம் பூரம் 4-ம் பாதம். சாதகம் சுத்தமாகக் கணிக்கப்படவேண்டும். அதன் பின்பே பலனைப் பற்றிச் சிந்திக்கலாம்.

செ. க. சோதி, மண்டூர்.

உமது கணவர் "ருதிரோற்காரி வருடம் ஆடி மாதம் 12-ம் திகதிக்குச் சரியான 1923 ஆடி 27 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி 30 நிமிஷத்துக்குப் பிறந்திருக்கிறார்." நட்சத்திரம் உத்தராடம் 3-ம் பாதம். மகரராசியும் சரியானதே. உமது களத்திராதிபன் குடும்பத்தானத்தில் பலம்பெறுவதால் உம்முடைய கிரகநிலையால் கணவருக்கு நோய் நீடிக்கக் காரணமில்லையென்பது தவநசயகர் தீர்ப்பு.

ஞ சாந்தகுமார், பரந்தன்.

சாதகத்தில் புதன் கன்னிராசியில் அமைய வேண்டும். உமது கடைசிப்பிள்ளை மருந்து சாப்பிட்டால் நீர் சுகமடைவீரா? அப்படியே சாதக பலன்களும்.

திருமதி செல்வராணி யோகநாதன், மானிப்பாய்.

உமது பிறந்ததிகதி நேரம் சரியாக இருப்பின் உமது ஜனன நட்சத்திரம் கேட்டை (சரியான கணிப்பின்படி) ஆக இருக்கவேண்டும். ஏழரைச் சனியின் காலமாகையால் துன்பமேற்பட்டது. குருமாற்றத்தின் (1986 தை 25) பின் நற்பலனுண்டு.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 44

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-3-1986க்குப்பின் கிடைக்கும் விடைகளி ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றுவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 44
சோதிடமலர்
மட்டுவில் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சூ 1 | 2 | 3 | த 4 | 5 | ம் 6 |
| 7 | 8 | ம் 9 | 10 | ■ | 12 |
| 13 | கா 14 | 15 | 16 | 17 | வ 18 |
| ■ | 20 | 21 | ■ | 23 | 24 |
| 25 | ற் 26 | 27 | 28 | ம் 29 | ■ |
| 31 | 32 | ■ | 34 | 35 | மா 36 |

பெயர் ..........................................................

விலாசம் ..........................................................

..........................................................

**இடமிருந்து வலம்**

1. தமிழ்த்திகதியும் வாரமும் இதனை அடிப்படையாகக் கொண்டது.
7. நெற்றிப்பொட்டைக் குறிக்குமிது மேன்மையானவர் என்றகருத்தையும் தரும். குழம்பியுள்ளது.
13. எண்வகைத் திருமணங்களுளொன்று ஒழிந்துள்ளது.
20. ஜாதகத்தில் ஆறும்வீட்டை ...... ஸ்தானம் என்று கூறுவர்.
23. மரத்தைக் குறிக்கும் சொல் இது.
25. பங்குனி மாதத்தின் வடமொழிப்பதம் மறைந்திருக்கிறது.
31. கடந்தமாதம் இவர் மகரராசியிலிருந்து கும்பராசிக்கு இடம் பெயர்ந்தார்.
34. குறித்தவோர் தினத்தில் மூன்றுதிதிகள் சம்பந்தப்படின் அத்தினத்தை இவ்வாறழைப்பர். குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ்**

1. யோகங்களுளொன்றுன இது ஓர் ஆயுதத்தையும் குறிக்கும்.
2. எழுத்துக்களை ஒழுங்காக்க வருடமொன்று கிடைக்கும்.
3. குழம்பியுள்ள இவ்யோகமிருப்பின் ஜாதகர் பெரும் செல்வந்தனுவான்.
4. மகாத்மா காந்தி எப்போதும் இவ் உடைகளையே அணிந்து வந்தார். குழம்பிவிட்டது.
6. சூரியன் இராசிமண்டலத்தை வலம்வர எடுக்கும் காலம் குழம்பியுள்ளது.
17. "ஆதி' என்பதன் எதிர்ப்பதம் மறைந்துள்ளது.
25. தென்னைக்கு தேங்காய் போல் கமுகிற்கு ...... நடு எழுத்து விடுபட்டுள்ளது.
28. கணிதக் குறியீடொன்றின் செய்கையை உணர்த்தும்சொல் தலைகீழாயுள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல 43ன் விடைகள்**

இடமிருந்து வலம்

1. மாளவயோகம் 7. காஞ்சிபுரம் 15. சபதம் 19. பூ(ச)ம் 22. சாரம் 26. சோபனம் 31. ஸ்திர

மேலிருந்து கீழ்

1. மாசிகம் 2. (தா)ளம் 3. (பி)ரபவ 4. யோகாசனம் 5. பஞ்சாங்கம் 6. புரதம் 20. பூரம் 27. சோதி

பரிசு பெறுவோர்:-

1-ம் பரிசு: V. S. சுப்பிரமணியம்
"மயிலை வாசம்", சோனப்பு வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

2-ம் பரிசு: கா சின்னையா, சங்குவாரி,
பாஸ்ரெருக், அட்டபாகை.

3-ம் பரிசு: எஸ். பீ. நடராஜா
101, கொட்டாஞ்சேனைவீதி,
கொழும்பு - 13.

கட்டுரைப் போட்டி

பரிசு ரூபா 50/-

## "நல்வாழ்க்கைக்கு சோதிடம் ஓர் வழிகாட்டி"

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் சோதிடமலருக்கு 9-வது ஆண்டு ஆரம்பமாவதையொட்டி இக்கட்டுரைப் போட்டி இடம்பெறுகின்றது.

போட்டி நிபந்தனைகள்:

* மேலே தரப்பட்டுள்ள தலைப்பின் கீழ் கட்டுரை எழுதப்படவேண்டும்.
* கட்டுரைகள் புல்ஸ்காப் தாளில் ஏறக்குறைய நான்கு பக்கங்கள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
* பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைக்கு ரூபா 50/- ரொக்கப் பரிசு வழங்கப்படுவதுடன் பரிசுக் கட்டுரை ஆண்டுமலரில் பிரசுரிக்கப் படும்.
* கட்டுரைகள் 31-3-86க்கு முன்னதாக எமக்குக் கிடைக்க வேண்டும்.
* போட்டிபற்றி ஆசிரியர் குழுவின் தீர்ப்பே முடிவானது.
* கட்டுரைகள் அனுப்பவேண்டிய முகவரி; கட்டுரைப்போட்டி சோதிடமலர், திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.

## 'சோதிடமலர்'

### 9-வது ஆண்டு சிறப்புமலர்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுடன் சோதிடமலருக்கு 9-வது ஆண்டு ஆரம்பமாவதனையொட்டி சித்திரை இதழ் சிறப்பு மலராக வெளிவரவுள்ளது.

இச் சிறப்பு மலரை மேலும் மெருகூட்டி பல வித கோணங்களில் பல்சுவை ஆக்கங்களையும் ஒருங்கே தாங்கி வெளிவரச் செய்வது வாசகர்களாகிய உங்களின் கடமையல்லவா? உங்கள் சிந்தனையில் உதிக்கும் பல்வேறு படைப்புக்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.




"மில்க்வைற்" தயாரிப்புகளின் மேலுறைகளைச்
சேகரித்துக் கொடுத்து பெறுமதி வாய்ந்த
பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பரிசு விபரம்

- ✶ மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 500 அல்லது சுப்ப மில்க்வைற் சோப் 50 மேலுறைகளுக்கு அழகிய துவாய் ஒன்று.
- ✶ 200 மில்க்வைற் நீல சோப் அல்லது 20 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளுக்கு பாடசாலைப் பை (School Bag) ஒன்று.
- ✶ 50 மில்க்வைற் நீலசோப் அல்லது 10 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளுக்கு அப்பியாசக் கொப்பி ஒன்று.

**மில்க்வைற் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ | 42-00 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல் வழி) | வருட சந்தா | ,, | 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, | 180-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, | 225-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-50 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280